
வாராந்த சஞ்சிகை
ஒக்ரோபர் 15 – 21 /2014

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-




# இந்திய வேட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையால் தங்கமங்கை



எங்களால் எதுவும் முடியாது என எண்ணி இருண்ட வாழ்வுக்குள் புதைந்து போகும் நம்மவர் மத்தியில் தனக்கு ஏற்பட்ட துன்பங்களை உடைத்தெறிந்து தன்னம்பிக்கையோடு வாழ்வில் போராடி தங்கம் வென்றுள்ளார் ரஜிதா.சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவியான இவர் சிறுவயதிலே தந்தையால் கைவிடப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்.அதனால் வறுமையின் பிடியில் ரஜிதா வாழ நேரிட்டது.அது போதாது என்று செவிப்புலனையும் இழக்க வாழ்வின் எல்லாத் திசையும் இருண்டு போனது. ஆனால் அந்த இருளைக் கண்டு சோம்பியிராமல் துணிச்சலோடு போராடி ஈட்டியெறிதலில் இந்த வருடம் தேசியமட்டத்தில் தங்கம் வென்று வடமாகாணத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

சிறுவயது முதலே தனக்கேற்பட்ட துன்பங்களை தகர்த்தெறிய வேண்டும் என்ற கனவு ரஜிதாவிடம் இருந்தது.தரம் 06 இல் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் இணைந்து கொண்ட இவருக்கு பாடசாலைச் சமூகம் வழங்கிய ஆதரவும் வரவேற்பும் சாதிப்பதற்கு பெரும் தூண்டு கோலாக அமைந்தது. ஆரம்பத்தில் ரஜிதா கரப்பந்து, கிரிக்கெட், வலைப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் அதிக ஆர்வம் காட்டிவந்தார்.

தரம் 8 இல் கல்வி கற்கும் காலத்தில் இவரின் ஈட்டி எறியும் திறனை கண்டுகொண்டார் கல்லூரியின் அப்போதைய மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளராக இருந்த சிவரூபன். இதனால் கிரிக்கெட்,கரப்பந்து ஆகியவற்றில் மட்டுமே குவிந்திருந்த ரஜிதாவின் ஆர்வத்தை ஈட்டியெறிதலின் பக்கம் பயிற்றுநர் திருப்ப முற்பட்டார்.ஆயினும் தன்னால் சிறப்பாக ஈட்டி எறியமுடியுமா என்ற சந்தேகம் ரஜிதாவுக்கு இருக்கவே செய்தது. ஆனால் பயிற்றுநர் கொடுத்த நம்பிக்கையும் ரஜிதாவிடம் இயல்பாகவே இருந்த ஓர்மமும் அவரை ஈட்டியெறிதலில் தேர்ச்சி பெற்ற வீராங்கனையாக மாற்றியது.

இதன் பின்னர் 2010 ஆண்டு முதல் இந்த வருடம் வரைதொடர்ச்சியாக மாகாண மட்டத்தில் ஈட்டி எறிதலில் முதலிடம் ரஜிதாவுக்கே. 2010 ஆம் ஆண்டு தேசியத்தில் 4 வது இடத்தைப் பெற்றார். 4ஆவது இடத்தைப் பெற்ற போதும் போதிய பயிற்சி செய்தால் இன்னும் சிறப்பான அடைவைப் பெறலாம் என்ற எண்ணம் ரஜிதாவுக்கு தோன்றியது. அதனால் உடலை வருத்தி தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வந்தார். ஆயினும் 2012 வரை இவருக்கு தேசியத்தில் சாதிக்கும் கனவு எட்டாக் கனியாகவே இருந்தது.

கல்லூரி நிர்வாகமும் பயிற்றுவிப்பாளரும் அவரது நம்பிக்கையைக் கலைய விடாது கொடுத்த ஊக்கத்தால் 2013 ஆண்டு தேசியமட்டத்தில் கலந்து கொண்டு ஈட்டியெறிதலில் 2 வது இடத்தை ரஜிதா தனதாக்கிக் கொண்டார். அதே வேகத்தோடு இந்த வருடமும் தேசியப் போட்டிக்குப் புறப்பட்ட ரஜிதா புயலாக மாறி ஈட்டியை எறிந்து தங்கப் பதக்கத்தை தன் வசமாக்கினார்.இதன் மூலம் விளையாட்டுப் போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு தங்கம் பெற்றுக் கொடுத்தவர் என்ற சாதனை யையும் ரஜிதா படைத்தார்.

"எனது குடும்ப வறுமையையும் தாயின் கஷ்டங்களையும் உணர்ந்து சமூகத்தில் எனக்கென ஒரு அந்தஸ்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வே என்னை இந்தளவு ஓர்மத்தோடு போட்டிகளில் பங்கேற்கச் செய்தது" என்று கூறுகிறார் ரஜிதா.

# கிடைத்தது விடை

கிரிக்கெட்டின் தாயக பூமியான இங்கிலாந்தில் கிரிக்கெட் பயிற்சியாளரால் பெரும் சர்ச்சை தோன்றியுள்ளது. அந்த அணியின் பயிற்சியாளராக கடமையாற்றிய சிம்பாப்வே அணியின் முன்னாள் சகலதுறை வீரர் அண்டி பிளவருடன் இணைந்து விக்கெட் காப்பாளர் மட் பிரையர் மற்றும் மூத்த பந்து வீச்சாளர்கள் சிலர் சகவீரர்களை மோசமாக திட்டியதுடன் அச்சுறுத்தியுள்ளதாகவும் வீரர்களை திட்டி அச்சுறுத்தும் புதிய கலாசாரத்தை அண்டி பிளவர் தான் அணிக்குள் தோற்றியிருந்தாகவும் பீட்டர்சன் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.




ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையில் ஆயுதம் ஏந்தாத போராக இரு நாட்டு கிரிக்கெட் ரசிகர்களாலும் பார்க்கப்படுகிற ஆஷஸ் டெஸ்ட் தொடர் கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து 5-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவிடம் மண்டியிட்டது.

இதனால் இங்கிலாந்து அணி பல தரப்பட்டவர்களின் விமர்சனத்துக்கு உள்ளானது. எனினும் இந்த டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி சார்பாக அதிகபட்சமாக 294 ஓட்டங்களை எடுத்த போதும் பீட்டர்சன் அணியில் இருந்து தூக்கி எறியப்பட்டிருந்தார்.

இருப்பினும் அணியில் இருந்து தூக்கி வீசும் போது மௌனம் காத்த பீட்டர்சன் ஒருவருடங்கள் கடந்து மௌனத்தை கலைத்துள்ளார்.

"விக்கெட் காப்பாளராக இருந்த மட்பிரையர் அணியில் தனக்குள்ள செல்வாக்கை தவறான முறையில் பயன்படுத்தினார். பொதுவாக பிடியினை தவறவிட்ட சக வீரர்களை பிரையர், அணியின் மூத்த வீரர்கள் கடுமையான வார்த்தையில் திட்டியுள்ளனர். இவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பயிற்சியாளர் பிளவரின் செயற்பாடும் மோசமாக இருந்துள்ளது. அவர் வீரர்களை ஒரு அச்சுறுத்தலான சூழ்நிலையிலேயே வைத்திருந்துள்ளார்.

இதனால் வீரர்கள் தங்கியிருக்கும் அறையில் மோசமான சூழ்நிலையே நிலவி வந்துள்ளது. இவற்றுக்கு மாறாக அனுபவவீரர் என்ற வகையில் அவர்களது செயற்பாடுகள் தவறானது என்று நேரடியாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையாலே அணியில் இருந்து ஓரம் கட்டப்பட்டடேன்.

இதன் மூலம் பிளவர் ஒரு சிறப்பான அணியை உருவாக்க விரும்பவில்லை. தனக்கான ஒரு ராஜாங்க அதிகாரத்தையே உரு வாக்க எத்தனித்துள்ளார்" என்று குற்றம் சாட்டியுள்ளார் பீட்டர்சன்.

டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்த பீட்டர்சன் அணியில் இருந்து தூக்கி எறியப்பட்டமைக்கான காரணம் அன்று புரியாத புதிராக ரசிகர்கள் மத்தியில் இருந்தது. இன்று பதில் கிடைத்துள்ளது.

# தண்ணீரில் மிதந்ததால் தண்டனை



விளையாட்டு வீரர்களை துரத்தி, சர்ச்சையில் மாட்டிவிடும் மதுவிடம் தண்ணீரில் மிதக்கும் மைக்கேல் பெல்ப்ஸும் மாட்டிக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த 29 வயதேயான பிரபல நீச்சல் வீரர் மைக் கேல் பெல்ப்ஸ்க்கு மது போதையில் வாகனம் செலுத்தியதால் 6 மாத கால போட்டி தடை விதிக்கப்பட்டுள்ளது. இது இவருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

2004 முதல் 2012 ஆண்டுகளுக்கு இடையே இடம்பெற்ற 3 ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சல் போட்டியில் 18 தங்க பதக்கங்கள் அடங்கலாக 22 பதக்கங்கள் பெற்று நீச்சல் ஜம்பவானாக திகழ்ந்து வருபவர் பெல்ப்ஸ்.

அமெரிக்காவின் மேரி லேண்ட் மாகாணத்தில் பால்டிமோர் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட வேகமான 48 கி.மீற்றர் வேகத்தில் மட்டுமே காரை செலுத்த வேண்டும். ஆனால், கடந்த மாதம் 30 ஆம் திகதி 83 கி.மீற்றர் வேகத்தில் பெல்ப்ஸ் மதுபோதையில் காரை செலுத்தியபோது பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டுள்ளார். இதனால் அவர் 6 மாதங்களுக்கு நீச்சல் போட்டிகளில் பங்கேற்க நீதிமன்றம் தடை போட்டுள்ளது. இது பெல்ப்ஸுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

2004 ஆண்டும் மெரிலேண்டில் இதே போன்று மது அருந்தி விட்டு வேகமாகக் காரை செலுத்தியதால் மைக்கல் பெல்ப்ஸ் 18 மாதம் நடத்தை விதிமுறை தண்டனை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரஷா என். அபுஷாபன் (rashaaRasha N. AbuShaaban) இங்கிலாந்தின் Aberdeen பல்கலைக்கழக முதுநிலைப்பட்டம் பெற்றவர். பலஸ்தீன சிவில் சமூக அமைப்புக்களிலும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களிலும் பணியாற்றியவர். தற்போது சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணிபுரிகின்றார். உரிமைகளை உறுதி செய்வதும், அதிகாரங்களைக் கையளிப்பதுவுமே, பெண்கள் குழந்தைகள், இளைஞர்கள் உள்ளடங்கலான அமைதிமிக்க பலஸ்தீன சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான திறவுகோல்கள் என்பது இவருடைய நம்பிக்கை. தற்பொழுது ஆக்கிரமிப்பு யுத்தம் நடைபெறும் காஸாவிலிருந்து இந்தக் குறிப்புக்களை alochonaa.com இணையத்தளத்துக்காக எழுதியுள்ளார். இவையே 'சுடர் ஒளி'யில் தொடராக விரிகின்றன.**

- ரஷா என். அபுஷாபன்
- தமிழில் : சயந்தன்

# படுகொலை நாள்களின் குறிப்புகள்

காஸா, ஜூலை 10, 2014

போர்நாள்- ஐந்து

இன்று யுத்தத்தின் ஐந்தாம் நாள், இருளடைந்து விட்டதா.. இது ஐந்தாவது நாளா அல்லது ஆறாவது நாளா.. ? பல வருடங்களுக்கு முன்னர் நடந்ததொன்றை நினைவு கொள்வதுபோல இந்த யுத்தம் எப்பொழுது ஆரம்பித்ததென நினைவுபடுத்த முயற்சித்தேன். வெகு சில நாள்களே ஆகியுள்ளன என்பதை நம்ப முடியவில்லை. நாள்களின் எண்ணிக்கை ஒரு பொருட்டே இல்லை. சொற்ப நாள்களில் காஸாவைத் துடைத்தழிக்க இஸ்ரேலால் முடியும். ஆனால் பலஸ்தீனரின் துயரங்களை நீடிப்பதும் வடுக்களை ஆழப்படுத்துவதும்தான் அவர்களுக்கு வேண்டியதாயிற்றே..



கடந்த இரவு தொடங்கிய கடல்வழித் தாக்குதல்களும் குண்டு வீச்சுக்களும் குறைந்த அளவில் இன்னமும் காஸா நகரப்பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன

நிலைகுலையச்செய்த சம்பவமொன்று நேற்று இரவு நடந்தது. மாற்றுத் திறனாளிகளுக்கான புனர்வாழ்வு நிலையத்தின் மீது இஸ்ரேலிய வான்படையினர் குறிவைத்துத் தாக்கியதில் நித்திரையிலேயே இரண்டு மாற்றுத்திறனாளிப் பெண்கள் கொல்லப்பட்டார்கள். பலர் காயமடைந்தனர். அவர்களில் பலர் அவயங்களை இழந்திருந்தனர். ஒரே சமயத்தில் பல தொண்டு நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் குறிவைக்கப்பட்டன. எத்தனை வெட்கக்கேடான சம்பவம் இது. இதனை எந்த வகையிலாவது அவர்களால் நியாயப்படுத்தி விட முடியுமா.. ?

சென்ற இரவு நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பிறகு எப்படி என்னால் தூங்கிட இயலும்.? நிம்மதியாக உறங்கும் உலகத்திலிருக்கும் அனைத்து மக்களுக்கும்.. குண்டுச் சத்தங்கள் இல்லை, வேவு விமானங்களின் இரைச்சல் இல்லை. இறந்த உடல் அவயங்களின் பரிதாபகரமான படங்கள் இல்லை, கட்டட இடுபாடுகளிடையே சாவணைத்த தம் குழந்தைகளைக் கட்டியணைக்கும் பெற்றோர்களின் காணொலிகள் இல்லை.. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தூக்கத்துக்கு நீங்கள் சந்தோஷப்பட்டுக் கொள்ளவேண்டும்..

ஒவ்வொரு முறையும் கண்களை மூடும்போதும் என் மக்கள் தூங்கிக்கொண்டிருக்க தாக்கியழிக்கப்படும் நூற்றுக்கணக்கான வீடுகளையே காண்கிறேன். சில சமயங்களில் முன் எச்சரிக்கையோடும் பல சமயங்களில் இன்றியும் ஒரு வீடு F 16இனால் குறி வைக்கப்படும்போது அதனுடைய அர்த்தம் என்னவென்றால் தாக்குதலின் தீவிரத்தினால் சுற்றியுள்ள 5 வீடுகளும் கடுமையாகச் சேதமுறும் என்பதுதான். நள்ளிரவில் அயல் வீடொன்றுக்கு எச்சரிக்கை கிடைக்கும் போதே நாமும் வெளியேறிவிட வேண்டும். எச்சரிக்கை கிடைத்த ஒருவர் உங்களிடம் வந்து சொல்வதையும் 7இலிருந்து 10 நிமிடங்களுக்குள்ளாக கண்ணுக்கு முன்னால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நீங்கள் ஓடுவதையும் கண் முன்னாலேயே வீடு அழிக்கப்படுவதையும் உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா..?

வீடென்பது சுவர்களாலான வெறும் கட்டடம் அல்ல. எங்களுடைய வீடுகள் எம்முடைய சிறு பராயங்கள். எம்முடைய நினைவுகள், எம்முடைய கனவுகள். அது எம்முடைய புகலிடம். உங்களுடைய புத்தகங்களை விட்டு, உங்களுடைய தலையணையை விட்டு, பணத்தை, நகைகளை விட்டு, சின்னத்தங்கைக்குப் பிடித்தமான பொம்மையை விட்டு, உங்கள் மகனின் விளையாட்டுப் பதக்கங்களை விட்டு, நீங்கள் விரும்பும் தேநீர்க் கோப்பையை விட்டு எப்படி உங்களால் நிமிடத்தில் வெளியேற முடியும்? ஒரு வேளை வெளியேறி உயிர் தப்பினால்கூட காலம் முழுதும் செத்துப் பிழைப்பதே வாழ்க்கையாயிருக்கும்.

> **பல சமயங்களில் இன்றியும் ஒரு வீடு F 16இனால் குறி வைக்கப்படும்போது அதனுடைய அர்த்தம் என்னவென்றால் தாக்குத லின் தீவிரத்தினால் சுற்றியுள்ள 5 வீடுகளும் கடுமையாகச் சேதமுறும் என்பது தான். நள்ளிரவில் அயல் வீடொன்றுக்கு எச்சரிக்கை கிடைக்கும் போதே நாமும் வெளியேறிவிட வேண்டும்.**

கடந்த நாள்களில் இந்தக்கதையை கேள்வியுற்றிருந்தேன். யாசீர் அல் ஹஜ் ஓர் இளைஞர். அவருடைய தொலைபேசிக்கு இஸ்ரேலிய இராணுவத்திடமிருந்து அழைப்பொன்று கிடைத்திருந்தது. 10 நிமிடங்களில் அவருடைய வீட்டைவிட்டு வெளியேறுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. யாசீர் அப்பொழுது வீட்டில் இருக்கவில்லை. வெளியே தன் நண்பர்களோடு இருந்தார். வீட்டுக்குத் தொடர்ச்சியாக அழைப்பை மேற்கொண்டும் யாரும் பதில் அளிக்கவில்லை. யாசீர் தன்னால் முடியுமானவரை விரைவாக ஓடினார். அவர் வீட்டை அடைந்த பொழுதில் எல்லாமும் முடிந்திருந்தது. வீடு, அவருடைய குடும்பம், அனைத்தும் மண்ணோடு மண்ணாகி விட்டன. தன்னுடைய தவறில்லாத ஒன்றின் குரூர நினைவைச் சுமந்துகொண்டு மிச்சமுள்ள நாள்களை அவர் எப்படி வாழப்போகிறார் என்று தெரியவில்லை.

செய்யவே முடியவில்லை.

நொடிக்கு நொடி செய்திகளைப் பின்தொடரும் சக்தி இன்று எனக்கில்லை. ஆயினும் பேஸ்புக் தகவல்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நெஞ்சை உருக்கும் ஒளிப்படங்களையும் காணொலிகளையும் கொண்ட செய்திகள்.. நேற்று நான் குறிப்பிட்ட ஹன்னாம் குடும்பத்திலிருந்து ஒரு குழந்தை. அவளுடைய பெயர் கிஃப்பா.. (போராடுதல் என்று அர்த்தம்) பிறப்பிலேயே காது கேளாதவள். அவள் தன் தாயின் குரலை ஒருபோதும் கேட்டதில்லை. ஒரு பாடலை, ஒரு பூனையின் சத்தத்தை, ஒரு சிட்டுக்குருவியின் குரலை அவள் எப்போதும் கேட்டதில்லை. இறுதியில் அவளுக்குச் சாவினைக் கொடுத்த குண்டுகளின் பெரு வெடிப்புச் சத்தத்தையும் அவள் கேட்டிருக்க மாட்டாள்.

இந்தக்காலத்தில் உலகின் பல நாடுகளிலும் நடந்த காஸாவுக்கு ஆதரவான போராட்டங்களும், எதிரியின் யுத்தக்குற்றங்களை அம்பலப்படுத்தியும் அவனுடைய ஆக்கிரமிப்பை நிறுத்தச் சொல்லியும் இடம்பெற்ற ஊர்வலங்களும் என் ஆத்மாவுக்கு சற்று உயிரளித்தது. பிரித்தானியாவிலும், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், ஜப்பானிலும், அரபு நாடுகளிலும் நடைபெறும் இந்தப் போராட்டங்களின் வழி பலஸ்தீனத்தை அங்கீகரிப்பவர்களும், அதனுடைய நியாயப்பக்கத்தைப் புரிந்து கொண்டவர்களும், ஆதரவளிப்பவர்களும் இந்த உலகமெங்கும் வாழ்கிறார்கள் என்று அறியும் போது நம்பிக்கை துளிர்த்தெழுகிறது. உடனடி நடவடிக்கைகளுக்காக இந்த மக்கள் தம்முடைய அரசுகளுக்கு மேலும் மேலும் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். அவர்களும் அதனை அறிவார்கள். டப்ளினில் ஓங்கி ஒலித்த ஒரு பிரித்தானியக் குழந்தையின் குரல் இன்றைய நாளை அர்த்தமாக்கியது. அவள் உரக்கச் சொல்கிறாள். "ஆறிலிருந்து கடல் வரை, சுதந்திர பாலஸ்தீனம்! சுதந்திர காசா!"

அதே சமயம் சிலரால் இஸ்ரேலுக்கு ஆதரவளிக்க முடிகிற தர்க்கம் என்ன என்பதும் எனக்குப் புரியவில்லை. இந்த விடயத்தில் சாதாரணமான ஒரு பின்னணியை நான் தரமுடியும். 66 வருடங்களுக்கு முன்னால் பலஸ்தீனத்தில் ஏற்கனவே மக்கள் குடியிருந்த பகுதிகளில் உலகெங்கும் துன்புறுத்தப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தினர் அகதிகளாகக் குடியேற்றப்பட்டனர். ஐரோப்பாவில் துன்புறுத்தப்பட்ட யூத அகதிகள் தமக்கான தாயகத்தைக் கண்டுபிடித்த போது இன்னுமொரு அகதிக்கூட்டம் உருவானது. அவர்கள் பலஸ்தீனர்கள். இஸ்ரேலிய விரிவாக்கம் நிரந்தரமானதும் நியாயமற்றதுமான ஆக்கிரமிப்புக்களின் வழியாக யூதர்களுக்கு மட்டுமான நகரங்களை உருவாக்கியது. இன்றும், மற்றும் காஸாவுக்கு எதிரான எல்லா யுத்தங்களின் போதும் காஸாவின் நிலத்தைப் பறித்தெடுக்கும் நோக்குடனேயே குண்டுகள் வீசப்படுகின்றன. ஹமாஸுடனோ அல்லது அது அல்லாமலோ பலஸ்தீன மக்களை அழிப்பதுதான் இஸ்ரேலின் நோக்கம். ஹமாஸை அழிக்கின்றோம் என்பதெல்லாம் வெறும் சாட்டுத்தான். சில தசாப்தங்களுக்கு முன்னர் எம் நிலம் திருடப்பட்டது. அன்றுமுதல் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தே வாழ்க்கை நகர்கிறது. ஒஸ்லோ உடன்படிக்கையினாலோ அல்லது இனவாத இரண்டு நாடுகள் தீர்வினாலேயோ (two state solution) வெகு நிச்சயமாக பாதுகாப்பு ஒருங்கிணைப்பினாலேயோ நம்முடைய நிலத்தைத் திரும்பப் பெற முடியாது. பேச்சுவார்த்தைகள் நிலைமைகளை மேலும் மோசமாக்கின. நில அபகரிப்புக்கான அச்சுறுத்தலை விடுத்தபடியல்ல.. மாறாக எதிர்த்தரப்பு உண்மையாக இருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும்.

எதிர்ப்பு என்பது சுதந்திரத்துக்கு மிக அவசியமானது. விடுதலைக்கான பாதை மென்மையானதோ அல்லது இலகுவானதோ அல்ல. அது மிக நீண்டது. இந்தப் போர் அதன் பாதையில் ஒரு மைல்கல். இந்தச்சூழலில் பெஞ்சமின் பிராங்கிளின் மேற் கோளொன்றை நினைவுபடுத்துகிறேன். சிறிய தற்காலிக பாதுகாப்பொன்றை அடைய அத்தியாவசிய சுதந்திரத்தை விட்டுக்கொடுப்பவர்கள் சுதந்திரத்தையும் சரி பாதுகாப்பினையும் சரி, அடையத் தகுதியானவர்களல்ல.

அல் காஸம் படையணிகள் இஸ்ரேலின் இரண்டாவது பெரிய நகரமான டெல் அவிவ் மீது பதிலடித் தாக்குதல்களை மேற்கொண்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. உயர் ஆற்றல் மிக்க ஏவுகணைகளை முதற்தடவையாக அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். இஸ்ரேலின் ஏவுகணை எதிர்ப்புப் பொறிமுறையை வெற்றிகரமாக அவர்கள் உடைத்துள்ளார்கள். இஸ்ரேலியர்களை இந்தத்தாக்குதல் திகிலடையச் செய்துள்ளது. சில இஸ்ரேலிய ஊடக ஆய்வாளர்களின் கூற்றுப்படி, ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராளிகள் பெரிய நாடுகளின் இராணுவங்கள் செய்ய முடியாத காரியத்தைச் சாதித்திருக்கின்றனர்.

எல்லா அறிகுறிகளும் ஒன்றையே சுட்டுகிறன: ஆம். காஸா தன் எதிர்ப்பை நிறுத்திக்கொள்ளாது. அடிப்படையானதும் முக்கியமானதுமான கோரிக்கைகள் ஏற்கப்படும்வரை இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப் படப்போவதில்லை. குறைந்தபட்சம் 2006 முதல் எங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதார முற்றுகையையாவது விலக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று வரை 30 குழந்தைகள் உட்பட 151 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1,063 பேர் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். 13 பாடசாலைகள் தீவிர சேதமடைந்துள்ளன. 5 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன. 3 பள்ளி வாசல்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலிய விமானத் தாக்குதல்களின் மொத்த எண்ணிக்கை 2090.

ஐந்தாவது நாள் முடிகிறது. இந்த நாள்குறிப்புக்கள் எழுதுவதை நான் நிறுத்த விரும்புகிறேன். இந்த யுத்தம் நிறுத்தப் படவேண்டும். இப்பொழுது இந்த நிமிடத்தில் சாளரத்தின் ஓரமாக உட்கார்ந்து இந்தக் குறிப்புக்களை எழுதுகின்றேன். வெளியே பூரண நிலவு எத்தனை அழகாயிருக்கிறது. வழமையாக நான் இரவுப் பொழுதுகளையே விரும்புகிறேன். அமைதியையும் பாதுகாப்பான உணர்வையும் தருவிக்கும் வல்லமை இரவுக்குண்டு.

ஆனால் என்றைக்கு காஸாவில் தாக்குதல்கள் தொடங்கப்பட்டனவோ அன்றைக்கே எல்லாம் தலை கீழாக மாறிவிட்டன.

**யுத்தத்தின் ஐந்தாவது நாள் முடிந்தது.**

**(அடுத்த நாள் விடியுமா?)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியுமா ஐ.எஸ்.ஐ.எஸ்?

**- வேல்.தர்மா**



இப்போது அமெரிக்காவுக்கு உள்ள மிகப்பெரிய எதிரி ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பினர்தான். அந்த அமைப்பை ஒடுக்குவதற்கு அது தீவிரமாகக் களமிறங்கியும் விட்டது. ஈராக்கில் மட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தினால் போதாது. சிரியாவிலும் அவர்கள் மீது தாக்குதல் நடாத்த வேண்டும் என அமெரிக்கா உறுதியாக நம்பியது. ஆனால் சிரிய அதிபர் பஷார் அல் அசாத் பதவியில் இருப்பதை விரும்பாத சவுதி அரேபியா, கட்டார் போன்ற நாடுகள் அசாத்துக்கு எதிராகப் போராடும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் மீது தாக்குதல் நடத்தத் தயக்கம் காட்டியிருந்தன. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த பல நாடுகளையும் இணைத்த ஒரு பரந்த கூட்டணி அமைக்கத் தீவிர முயற்சி எடுத்தது. இதில் ஈரானையும் இணைத்துக் கொள்ள பெரு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் ஈரான் மறுத்து விட்டது.




### முதலில் இணைந்த பிரான்ஸ்

ஈராக்கிலும் சிரியாவிலும் செயற்படும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிராகப் பிரான்ஸும் விமானக் குண்டுத் தாக்குதல்களை 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதியில் இருந்து ஆரம்பித்தது. ஏற்கனவே அமெரிக்கா ஒகஸ்ட் மாதம் எட்டாம் திகதியில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் இலக்குகள் மீது கடுமையான விமானக் குண்டுத்தாக்குதல்களை நடத்தி வருகின்றது. பிரான்ஸ் விமானங்கள் ஈராக்கின் ஜுமார் நகரில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்தி அதன் உறுப்பினர்களைக் கொன்றன. சைப்பிரஸில் உள்ள பிரிட்டன் படைத்தளத்தில் இருந்து அதன் விமானங்கள் ஈராக்கில் வேவு பார்க்கும் பறப்பில் முதலில் ஈடுபட்டன. இப்போது பிரிட்டன் விமானங்கள் நேரடித் தாக்குதலில் ஈடுபட பிரிட்டன் நாடாளுமன்றத்தின் அனுமதிக்குக் காத்திருக்கின்றன. டச்சு விமானப் படையினரும் பின்னர் அமெரிக்காவுடன் இணைந்து கொண்டனர்.

பிரான்ஸைத் தொடர்ந்து சவுதி அரேபியா, ஜோர்தான், காட்டார், பஹ்ரேய்ன், ஈராக் ஆகிய நாடுகள் சிரியாவிலும் ஈராக்கிலும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிராக விமானத் தாக்குதலை செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பித்தன. அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்த நாடுகளை இணைய வைத்தது பெரும் வெற்றியாகும். ஒரு இஸ்லாமிய அமைப்புக்கு எதிராகப் போர் புரிவது சவுதி அரேபியா, ஜோர்தான், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், பஹ்ரெய்ன், ஈராக் ஆகிய நாடுகளுக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### குர்திஷ் பெஷ்மேர்கா படையினர்

லிபியாவில் உள்ளூர்ப் போராளிகள் அதிபர் மும்மர் கடாஃபியின் படையினருக்கு எதிராக தாக்குதல் நடத்த நேட்டோப் படையினர் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தினர். இதில் கடாஃபியின் படையினர் அழிக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டனர். இதே போல் தரையில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மீது பெஷ்மேர்கா படையினர் தாக்குதல் நடத்த விமானத் தாக்குதலை அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் நிகழ்த்தி ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகளைத் தோற்கடிப்பதே அமெரிக்காவின் திட்டம். ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையான பென்டகன் அமெரிக்கப்படைகள் ஒரு தரைவழிப் படையெடுப்பின் மூலமே ஐ.எஸ்.ஐ.எஸ் ஐ அழிக்க முடியும் எனக் கருதுகின்றது. ஆனால் பராக் ஒபாமா அமெரிக்கப்படையினரின் காலடிகள் ஈராக்கில் பதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மீது பெஷ்மேர்கா படையினர் தாக்குதல் நடத்த விமானத் தாக்குதலை அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் நிகழ்த்தி ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகளைத் தோற்கடிப்பதே அமெரிக்காவின் திட்டம். ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையான பென்டகன் அமெரிக்கப்படைகள் ஒரு தரைவழிப் படையெடுப்பின் மூலமே ஐ.எஸ்.ஐ.எஸ் ஐ அழிக்க முடியும் எனக் கருதுகின்றது. ஆனால் பராக் ஒபாமா அமெரிக்கப்படையினரின் காலடிகள் ஈராக்கில் பதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்

### ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தோற்றம்

2003 ஆம் ஆண்டு சதாம் ஹுசேன் பேரழிவு விளைவிக்கும் படைக்கலன்களை வைத்திருக்கின்றார் எனப் பொய் சொல்லி ஈராக்கை அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்தன. அப்போது ஈராக்குக்கான அல்-கெய்தா என ஒரு அமைப்பு ஈராக்கில் ஜோர்தானியரான அபு முசாப் அல் ஜர்காவி (Abu Musab aldZarqawi) என்பரால் உருவாக்கப்பட்டு அது அமெரிக்கப்படைகளுக்கு எதிராகப் போராடியது. பின்னர் 2004 அம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அது அல் -கெய்தாவின் ஒரு கிளை அமைப்பாக மாற்றப்பட்டது. ஸுனி முஸ்லிம் அமைப்பான ஈராக்குக்கான அல் கெய்தா அமெரிக்காவுடன் ஒத்துழைப்பவர்களையும் சியா முஸ்லிம்களையும் கொன்று குவித்தது. பின்னர் இந்த அமைப்பு தனது தாக்குதல்களை ஜோர்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கும் விரிவு படுத்தியது. ஈராக்குக்கான அல் -கெய்தா அமைப்பே பின்னர் தனது பெயரை ஐ.எஸ்.ஐ.எஸ் என மாற்றிக் கொண்டது.

### ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் வளர்ச்சி

சிரியாவில் அரபு வசந்தம் ஆரம்பித்த பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் சிரிய அதிபர் பஷார் அல் அசாத்துக்கு எதிராகப் போராடத் தொடங்கினர். இதனால் அசாத்துக்கு எதிரான மத்திய கிழக்கு ஸுனி ஆட்சியாளர்களிடமிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு பெரும் நிதியையும் படைக்கலன்களையும் பெற்றது. பின்னர் சிரிய அதிபர் அசாத்துக்கு எதிராகப் போராடும் இன்னும் ஒரு அமைப்பு மீது திடீரெனப் பாய்ந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். இது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மீது பல ஐயங்களை ஏற்படுத்தியது. இதன் தலைவர் அபூபக்கலர் அல் பக்தாடி ஒரு யூதர் என்றும் அவர் இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உளவாளி என்றும் செய்திகள் வந்தன. சிரியாவில் பெரு நிலப்பரப்பைக் கைப்பற்றிய அபூபக்கலர் அல் பக்தாடி தலைமையிலான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஈராக்கில் மிகக் கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஈராக்கிலும் சிரியாவிலும் பத்துக்கு மேற்பட்ட நகரங்களைக்கொண்ட பெரு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். இப்போது அமெரிக்கா தலைமையிலான நாடுகள் தாக்குதலைத் தொடங்கியிருப்பதால் அந்த அமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதல் தீவிரமடைந்தால் அவர்கள் சிரியாவில் இருந்து துருக்கிக்குத் தப்பிச் சென்று பின்னர் ஈரான், ஆப்கானிஸ்த்தான், நைஜீரியா, சோமாலியா, ஈரான் போன்ற நாடுகளுக்குத் தப்பிச் செல்லலாம். ஈராக்கில் இருந்து நேரடியாக ஈரானிற்கும் தப்பிச் செல்லலாம். பின்னர் அவர்களால் மீளத் திரள முடியும். ஆனால் சிரியாவில் அசாத்தின் ஆட்சியை அகற்றுவது எப்படி? ஈராக்கில் ஓர் உறுதியான நல்லாட்சியை ஏற்படுத்துவது எப்படி? ஆகிய கேள்விகளுக்கான விடை காண்பது அந்த அமைப்புக்குச் சிரமமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிகுமரன்

# கடல் கடந்த காடைத்தனம்



இலங்கையில் அரச தரப்பினால் மேற்கொள்ளப்படும் காடைத்தனங்கள் அப்படியொன்றும் பெரிய அதிசயங்களல்ல. அவை அடிக்கடி இடம்பெறும் சாதாரண சம்பவங்களே. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாக அடிக்கடி பெருமைப்படுவதுண்டு. பயங்கரவாத ஒழிப்பின் பலாபலன்களில் ஒன்றாகவும் அரச தரப்பினரின் காடைத்தனங்களை ஜனாதிபதி கருதியிருக்கக் கூடும். இது அவர்கள் பெற்ற சுதந்திரம். மத்தள விமானநிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகிய இடங்களைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது அரசின் ஆதரவாளர்கள் பொலிஸார் முன்னிலையில் தாக்குதல் நடத்தினர். அம்பாந்தோட்டை மேயரே துப்பாக்கியைக் காட்டி அவர்களை விரட்டியிருந்தார்.இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு பல்கலைக் கழகத்துக்குள்ளும் புகுந்து சேதம் விளைவித்தது ஒரு கும்பல். இந்தக் கும்பலுக்கு பிரதியமைச்சர்ஒருவரே தலைமையேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகப்பிரசித்தமான சண்டித்தனம்

இதைவிட சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டி வைத்து அடித்த அமைச்சர் மேர்வின் சில்வாவின் சண்டித்தனம் உலகப் பிரசித்தமானது.

இப்படியாக இலங்கையின் பல பகுதிகளிலும் அரசாங்கத் தரப்பினர் பொலிஸாரின் ஒத்துழைப்புடனும் அதிகாரப் பின்னணியுடனும் பலவிதமான காடைத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரத்தில் அரச தரப்பினரின் காடைத்தனம் கடல்கடந்து நியூயோர்க் வரை சென்றுள்ளது இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஜனாதிபதி சென்றிருந்தார். ரஜனி நடித்த சிவாஜி படத்தில் "பன்னிங்க தான் கூட்டமாக வரும்.சிங்கம் சிங்கிளாகத்தான் வரும்" என்று ஒரு பிரபலமான வசனம் உண்டு. அந்த வசனம் மஹிந்தவுக்கு மனப்பாடம் போலும். அதனாலோ என்னவோ தனியாகச் செல்லாமல் ஒரு பெரிய பட்டாளத்தோடு தான் நியூயோர்க் போய் இறங்கினார் ஜனாதிபதி. ஜனாதிபதியோடு சென்ற குழுவுக்கு நியூயோர்க் நகரில் ஒரு விருந்துபசாரம் நடத்தப் பட்டது. இதன் போது பிரிட்டனுக் கான இலங்கைத் தூதுவர் கிறிஸ்தோனிஸுக்கு வித்தியாசமான முறையில் விருந்து வழங்கப்பட்டது.

அதாவது இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ்குணவர்த்தன பிரிட்டனுக்கான தூதுவரைச் கன்னத்தில் அறைந்து காலால் உதைத்து விருந்து படைத்துள்ளார். இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அங்கிருந்துள்ளார்.

### அப்பாவிகளே குற்றவாளிகள்

ஒரு நாட்டுக்கான தூதுவர் என்றால் அவர் அந்த நாட்டுக்கான இலங்கை ஜனாதிபதியின் பிரதிநிதி. பிரிட்டனில் அவரின் நடவடிக்கைகள் ஜனாதிபதியின் நடவடிக்கைகளாகவே கணிக்கப்படும். அப்படியான பெறுமதியைக் கொண்ட ஜனாதிபதியின் பிரதிநிதியை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தாக்குமளவுக்கு காடைத்தனத்தை இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக்கியுள்ளது.

கிறிஸ் ரோனிஸ் அன்று மாலையே தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்து விட்டார். அவரின் ராஜினாமா ஏற்றுக் கொள்ளப் பட்டது மட்டுமன்றி வெளிநாட்டுச் செயலர் அவர் தொடர்பான முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார். இப்போது கிறிஸ்ரோனிஸ் மீது விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

தாக்கப்பட்டவர் குற்றவாளியாக்கப் படுவது இலங்கை யில் அப்படியொன்றும் அதிசயமல்ல. மஹியங்கனை பிரதேச சபை உறுப்பி னரிலிருந்து சப்பிரகமுவ பல்கலைக் கழக மாண வன் சுதர்சன் வரை தாங்ளைத் தாங்களே தாக்கிக் கொண்டு வேறு சிலர் தாக்கியதாகப் பொய் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். கிறிஸ் ரோனிஸுக்கும் இப்படி ஒரு கதி நேரக் கூடும்.

அரசுக்குத் தலையாட்ட மறுக்கும் ராஜதந்திரிகள், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் திடீர் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர். அல்லது அவர்கள் அந்தப் பதவிகளிலிருந்து தாங்களாகவே வெளியேற நிர்ப்பந்திக் கப்படுவர். தயான் ஜயதிலக, தாமிரகுணநாயக்க ஆகியோரைப் போன்று வெளிவிகாரங்களிலும் ராஜதந்திரப் பணிகளிலும் நீண்ட கால அனுபவமும் வெளிநாடுகளின் மதிப்புக்கு முரியவரான கிறிஸ்ரோனிஸ் கூட பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

### திறமைக்கு இடமில்லை

இதே கருத்தை ஜனாதி பதியின் வெளிவிவகார ஆலோசகரான ரஜீவ விஜயசிங்கவும் ஒப்புக் கொண்டுள்ளார். அவர் தன்னால் கூறப்படும் ஆலோசனை களை ஜனாதிபதி பொருட்படுத்துவதில்லை எனவும் வெளிவிவகார அமைச்சில் திறமை யானவர்கள் இருப்பதை விரும்புவதில்லை எனவும் அவர்கள் ஏதோ ஒரு வழியில் வெளியேற்றப்படுகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கொள்கை இல்லாதவர் எனவும் பதவியைக் காப்பாற்றும் வகையிலேயே செயற் பட்டு வருபவர் எனவும் தெரிவித் துள்ளார்.

அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையில் மேற் கொள் ளப்படும் இத்தகைய முறை மீறல்கள் இலங்கைக்கு பாதகமான விளைவு களையே ஏற்படுத்தும் எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

ரஜீவவிஜேசிங்கவின் கவலையை அர்த்தமுள்ளது என்பது உண்மை தான். ஆனால் இப்படியான கருத்துக் களை தொடர்ந்து வெளியிட்டு வரும் வேளையில் அவரும் கூட வெளியேற்றப்படும் சாத்தியக் கூறுகள் உண்டு என்பது குறிப்பிடத் தக்கது.

எனினும் கிறிஸ்ரோனிஸின் முறைப்பாடு தொடர்பாகவும் அவர் பற்றிய வெளிவிவகார செயலர் செய்த முறைப்பாடு தொடர்பாகவும் ஜனாதிபதி உயர்மட்ட விசாரணைக்கு உத்தர விட்டுள்ளார். ஆனால் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் முன்பே எந்த வித ஆட்சேபனையுமின்றி அவரது ராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டு விட்டார். அவரின் இடத்துக்கு வேறு ஒருவர் பிரிட்டன் தூதுவராக நியமிக்கப் பட்டு விட்டார்.

### கொடுக்க வேண்டும் விலை

ஒரு விசாரணை நடத்தப்பட்டு தவறு எங்கு உள்ளது என்பது தீர்மானிக்கப்படாமலே அவரது ராஜினாமா ஏற்றுக்கொள்ளப் பட்டதன் மூலம் ஏற்கனவே திட்டமிட்ட வகையில் அவரை வெளியேற்றும் நோக்குடனேயே சம்பவங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

எனினும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெளிநாட்டு ராஜதந்திரிகள் முன்னிலையில் இலங்கைத் தூதுவரை கன்னத்தில் அறைந்து காலால் உதைப்பது எவ்வளவு அநாகரீகமான செயல் என்பது பற்றி அரச தரப்பில் எவராலும் உணரப்படவில்லை.

அதாவது இதுவரை அரசதரப்பினரால் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட காடைத்தனங்கள் எப்படி உயர்மட்டங்களால் ஆசீர்வதிக்கப் பட்டனவோ அவ்வாறே கடல் கடந்த காடைத் தனங்களும் அங்கீகாரம் பெறும் என்பது இதன் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

ஆயினும் இவற்றுக்கான விலையை உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச அரங்கிலும் இலங்கை கொடுக்க வேண்டிய நிலை வெகு விரைவில் உருவாகும்என்பதுமட்டும்நிச்சயம்.

**தாக்கப்பட்டவர் குற்றவாளியாக் கப்படுவது இலங்கையில் அப்படியொன்றும் அதிசயமல்ல. மஹியங்கனை பிரதேச சபை உறுப்பினரிலிருந்து சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவன் சுதர்சன் வரை தாங்ளைத் தாங்களே தாக்கிக் கொண்டு வேறு சிலர் தாக்கியதாகப் பொய் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடக்கு மாகாண சபை எதையும் சாதிக்கவில்லை"

நேர்கண்டவர்
சு.கோமேஸ்



*மாகாண சபைத் தவிசாளர் சி.வி.கே. சிவஞானத்தோடு ஒரு நேர்காணல்*

***கேள்வி;-வடக்கு மாகாணசபை யில் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்து 1 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. இந்த ஒரு வருட காலத்தில் இதுவரை வடக்கு மாகாணசபை சாதித்தது என்ன?***

***பதில்;***-கூட்டமைப்பு வடமாகாண சபை ஆட்சிக்கு வந்துள்ளதாகக் கூறுகின்றீர்கள். உண்மையில் நான் ஆட்சிக்கு வந்ததைப் போல நினைக்கவில்லை. வடக்கு மாகாணசபை பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. ஏனெனில் நாங்கள் ஏனைய மாகாணங்களை விட போரினால் 25 வருடங்கள் நாங்கள் பின்னோக்கி தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே அதனை ஒருவருடத்துக்குள் சீர் செய்துவிட முடியாது. அதற்கு காலம் தேவை. எனவே எடுத்த எடுப்பில் வடமாகாணசபை இந்த ஒருவருடத்தில் என்ன செய்தது என்று கேள்வி கேட்பது அர்த்தமற்றது.

**எங்களோடு உடன்படாத- எங்களின் நிர்வாக வருகையினை விரும்பாத- ஒரு அரசாங்கமும் அந்த அரசாங்கத்தின் பிரதிநிதியான ஆளுநரும் இருக்கின்ற போது நாங்கள் எதனையும் இலகுவில் சாதித்துவிட முடியாது. இத்தகைய முட்டுக் கட்டைகளைக் கடந்தே நாங்கள் எல்லா வற்றையும் செய்ய வேண்டி இருக்கிறது.**

இதுவரை 17 அமர்வுகள் நடைபெற்றுள்ளன. இதன் போது 140 தீர்மானங்களும் 2 நியதிச் சட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள் ளன.இவற்றையே தற்போது வடமாகாண சபையின் செயற்பாடுகள் எனக் கூற முடியும். இலங்கையில் இடம்பெற்றபோரினால் வடக்கில் 80ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் தமது கணவனை இழந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு தேவையான உதவிகள் அல்லது திட்டங்களை வடக்கு மாகாணசபை முன்னெடுத்துள்ளது.

அவர்களுக்கு உதவி செய்வதற்கான நிதி ஒதுக்கீடுகள், திட்டங்கள் இதுவரை வடமாகாணசபையில் இல்லை. ஆனால்சிறியளவிலேனும் உதவி வருகிறோம். அதுமட்டுமின்றி அரசார்பற்ற நிறுவனாங்களும் அவர்களுக்கான உதவிகளை செய்து வருகிறது. வடமாகாண சபையினால் சிலவிடயங்களை முற்று முழுதாக நிறைவேற்ற முடியாது.

***கேள்வி;***-நீங்கள் சொல்வது போல வடமாகாண சபையால் எதையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமைக்கு காரணிகள் எவை என நினைக்கிறீர்கள்?

***பதில்;***- எங்களோடு உடன்படாத- எங்களின் நிர்வாக வருகையினை விரும்பாத- ஒரு அரசாங்கமும் அந்த அரசாங்கத்தின் பிரதிநிதியான ஆளுநரும் இருக்கின்ற போது நாங்கள் எதனையும் இலகுவில் சாதித்துவிட முடியாது.

இத்தகைய முட்டுக்கட்டைகளைக் கடந்தே நாங்கள் எல்லாவற்றையும் செய்ய வேண்டி இருக்கிறது.

***கேள்வி;-வடக்கு மாகாணசபை நிர்வாகத்துக்கும் ஆளுநருக்கும் இடையில் முரண்பாடுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு தொடர்ந்து சென்றால் வடமாகாண சபையின் எதிர்காலம் எவ்வாறு அமையும்?***

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# வைக்கோல் பட்டடை நாய்கள் யார்?

தான் ஒரு நாட்டின் மதிப்புக்குரிய ஜனாதிபதி என்பதை மஹிந்த ராஜபக்ஷ அடிக்கடி மறந்து விடுகிறார். இதன் காரணமாக ஒரு சராசரி அரசியல் வாதியை விடவும் கீழ்த்தரமான வார்த்தைகளை அவர் மக்கள் முன்னிலையில் உதிர்க்கவும் செய்கிறார். கடந்த வாரம் கிளிநொச்சிக்கு வந்திருந்த ஜனாதிபதி அங்கு உரையாற்றும் போது "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைக்கோல் பட்டடை நாய் போல செயற்படுகிறது. வடக்கு மாகாண சபை ஊடாக அவர்களும் எதுவும் செய்கிறார்கள் இல்லை. எம்மையும் எதுவும் செய்ய விடுகிறார்கள் இல்லை" என்று கூறியிருந்தார்.

தனது நாட்டுக்குள் இருக்கும் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாண அரசையும் கட்சியையும் "நாய்" என்று ஜனாதிபதி கூறியது அரசியல் நாகரீகமான செயல் அல்ல.தான் உண்மையில் அம்பாந்தோட்டைச் சண்டியன் தான் என்பதை இப்படிப்பட்ட வார்த்தைகளின் ஊடாக அவர் அடிக்கடி நிரூபிக்கிறார்.

அந்த மேடையில் அவர் கூறிய வார்த்தைகளை மேலோட்டமாக கேட்கும் எவரும் மஹிந்த சொல்வது சரிதானே என்று நினைக்கக் கூடும். ஏனெனில் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் ஆகியும் வடக்கு மாகாண சபை உருப்படியான செயல் எதனையும் செய்யவில்லை என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது.ஆனால் அப்படியான இயங்கா நிலைக்கு காரணம் யார் என்பதை ஆராய்ந்து பார்த்தால் அதற்குப் பதில் மத்திய அரசாங்கமும் அதன் ஆளுநரும் தான் என்பதே பதிலாக இருக்கும். ஏனெனில் மாகாணசபையின் ஒவ்வொரு செயற்பாட்டையும் குழப்பியே தீருவது என்ற கங்கணத்தோடு இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது.

ஏனெனில் எல்லா மாகாண சபைகளிலும் வீழ்த்த முடியாத வல்லமையோடு வலம் வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வடமாகாண சபைத் தேர்தலில் மரண அடி வாங்கியிருந்தது. மொத்தம் உள்ள 38 ஆசனங்களில் 30 ஆசனங்களை கூட்டமைப்பு அள்ளியெடுத்தது. அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு கோடிக் கணக்கில் எலும்புத் துண்டுகளை வீசியெறிந்தும் அவர்கள் சலுகைகளுக்கு மயங்காமல் தங்கள் உரிமைக்கான ஆயுதமாக வடக்குத் தேர்தலை பயன்படுத்தியிருந்தார்கள். இது படுதோல்வியடைந்த மஹிந்த அரசுக்கு கடுப்பைக் கிளப்பியது. எனவே தான் அதற்குப் பழிவாங்கும் வகையில் வடக்கு மாகாண சபையை செயற்பட விடாமல் அதனை ஊனமாக்கும் வேலைகள் முடுக்கி விடப்பட்டன. வடக்கு முதலமைச்சரை விடவும் வட மாகாண பிரதம செயலரே அதிகாரம் மிக்கவர் என்பது போலக் காட்டப்பட்டது. இதை விட மாகாண சபையின் ஒவ்வொரு நகர்வுக்கும் ஆளுநர் ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி முட்டுக்கட்டை போட்டு வந்தார். இதனால் தான் வெளிப்பார்வைக்கு தனியே பிரேரணைகளை மட்டும் நிறைவேற்றும் ஒரு மன்றமாக மாகாணசபை சொல்லப்பட்டது.


இத்தகைய நிலையைத் தான் மத்திய அரசு விரும்புகிறது. ஏனெனில் வடமாகாண சபை எதுவும் செய்யா விட்டால் காலப்போக்கில் அதன் மீது மக்களுக்கு இயல்பான வெறுப்பு உருவாகும். இந்த வெறுப்பின் வளர்ச்சி தேர்தலில் எதிரொலித்து கூட்டமைப்பை ஆட்சியிலிருந்து மக்கள் தூக்கி எறிந்து விடுவார்கள் என்று மஹிந்த வாதிகள் கணக்குப் போடுகிறார்கள். ஆனால் அந்தக் கணக்கு தமிழ் மக்களிடையே பலிக்குமா என்பது தான் கேள்வி.

உண்மையான வைக்கோல் பட்டடை நாய் மத்திய அரசு தான்.தாங்களும் மக்களுக்கு எதுவும் செய்யாமல், வடக்கு மாகாண சபையையும் எதுவும் செய்ய விடாமல் தடை போடுவது அவர்கள் தானே?

எனவே தனக்குத் தானே அந்த வார்த்தையை ஜானதிபதி சொல்லியிருக்கிறார் என்றே கருதவேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நான் பொதுவாகவே ஆயுதச் செயற்பாட்டுடன் உடன்படாதவன் என்ற காரணத்தினால் தான் அவர்கள் என்னையும் மற்றவர்கள் போல பார்க்கின்றனரே தெரியவில்லை. அதனால் என்னை தமிழரசுக்கு கட்சிக்கு சார்பானவன் என்று நினைக்கின்றார்கள். உண்மையில் நான் நடுநிலையாகவே செயற்படுகிறேன்" என்று தான் முதலமைச்சர் கூறியிருந்தார்.இதனையே ஊடகங்கள் பிழையாக விளங்கிக் கொண்டு செய்தி வெளியிட்டுள்ளன.**



***பதில்;-*** உண்மையில் அவர் ஒரு ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் பிரதிநிதி. ஆகவே அரசாங்கம் என்ன நினைக்கிறதோ அதனையே அவர் செய்கின்றார். தற்போது சில சட்டங்களை அவர் அங்கீகரித்துள்ளார். இது அவருடைய மன மாற்றத்தினை காட்டுகிறது

எம்மை பொறுத்த வரை மாணசபைக்கு வழங்கப்பட்டுள்ள சட்டம் தான் எங்களுக்கு பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. அது மாற்றமடையும் வரை மாகாணசபைக்கு எந்த ஆளுநர் வந்தாலும் தற்போதுள்ள நிலைதான் உருவாகும்.

உண்மையில் மாகாண சபைச் சட்டத்தினை மாற்றினால் ஆளுநரால் ஏற்படும் எல்லாப் பிரச்சினைக்கும் முடிவு வந்துவிடும் .

***கேள்வி;-வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றும் சபையாக மட்டுமே வடக்கு மாகாணசபை செயற்படுவதாகப் பலரும் குற்றம் சாட்டுகின்றார்களே...?***

***பதில்;-*** அவ்வாறு கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் இதுவரை வடக்கு மாகாணசபையில் 140 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாகாணசபையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் குறித்த துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டே வருகிறது.

ஒவ்வொரு பிரேரணை தொடர்பாகவும் மக்களுக்கு தெளிவு படுத்திக் கொண்டிருப்பது கஷ்டமானது .

***கேள்வி;-வடக்கு முதல்வர் தம்மைச் சுற்றி வர ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களே இருப்பதாக அண்மையில் கூறியுள்ளாரே. அவரது கூற்று மாகாணசபையில் உள்ள கூட்டமைப்புக்குள்ளே முரண்பாடு இருப்பதை வெளிக்காட்டுகிறதா?***

***பதில்;-*** முதலமைச்சர் க.வி விக்கினேஸ்வரன் தம்மை சுற்றி ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இருப்பதாகக் கூறவில்லை. ஊடகங்கள் தான் அவ்வாறான செய்திகளை வெளியிட்டன.

அந்தச் சந்திப்பில் நானும் கூடவே இருந்தேன். வடக்கு முதலமைச்சர் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு சாதகமாக நடப்பதாக ஈ.பி.ஆர். எல் .எப் அணியினைச் சேர்ந்த சிலர் மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டி வந்தனர்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் "நான் பொதுவாகவே ஆயுதச் செயற்பாட்டுடன் உடன்படாதவன் என்ற காரணத்தினால் தான் அவர்கள் என்னையும் மற்றவர்கள் போல பார்க்கின்றனரே தெரியவில்லை. அதனால் என்னை தமிழரசுக்கு கட்சிக்கு சார்பானவன் என்று நினைக்கின்றார்கள். உண்மையில் நான் நடுநிலையாகவே செயற்படுகிறேன்" என்று தான் முதலமைச்சர் கூறியிருந்தார்.இதனையே ஊடகங்கள் பிழையாக விளங்கிக் கொண்டு செய்தி வெளியிட்டுள்ளன.

***கேள்வி;- கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்ற குரல்கள் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன. ஆனால் அதைப்பற்றி கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லையே?***

***பதில்;-*** கூட்டமைப்பினைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்ய விடமாட்டோம். அவ்வாறு பதிவு செய்தால் தமிழரசுக் கட்சி இல்லாமல் போய்விடும். தனிக்கட்சியாக கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என்று கூறுபவர்கள் சட்டத்தினை ஒழுங்காக விளங்கிக் கொள்ள வேண்டும்.

மக்கள் நலனுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இணைந்து செயற்பட முடியும். எனவே எல்லாக் கட்சிகளும் இணைந்து செயற்படுவோம். ஆனால் தனிக் கட்சியாக கூட்டமைப்பை பதிவு செய்ய ஒரு போதும் இடம்கொடோம்.

***கேள்வி;-போரில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கலில் நினைவிடம் ஒன்று அமைக்க வட மாகாணசபையில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது.ஆனால் அது ஏன் கைவிடப்பட்டது?***

***பதில்;-*** இப்போதுள்ள நாட்டு நிலமையில் நாங்கள் நினைத்தபடி எதனையும் செய்ய முடியாது. உண்மையில் முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி அமைப்பது தொடர்பாக யாரும் பேசலாம். ஆனால் அதற்கு செயல்வடிவம் கொடுப்பதில் தான் பிரச்சினையே இருக்கிறது.

எந்த இடத்தில் நினைத்தூபி அமைப்பது என்பது முதல் பல்வேறு வகையான சட்டச் சிக்கல்கள் இந்த விடயத்தில் இருந்ததால் தான் அந்தப் பிரேரணையைக் கைவிடவேண்டி வந்தது.

***கேள்வி:- வடமாகாணசபை உறுப்பினர்களுக்குள் பிளவுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது... குறிப்பாக முள்ளிவாய்க்கல், நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்களில் ஒரு சிலரே கலந்து கொள்கின்றனர் இது தொடர்பாக?***

***பதில்;-*** வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் எந்த விதமான பிளவுகளும் கிடையாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பொறுத்த வரை இது நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு .

எனவே கருத்து வேறுபாடுகள் இருக்கத் தான் செய்யும் ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எந்த வேறுபாடுகள் இல்லை சில போராட்டங்களில் சிலர் கலந்து கொள்வார்கள் அது அவர்களுடைய அணுகுமுறையினை பொறுத்தது.

உண்மையில் கடந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தினம் கட்சி எடுத்த முடிவல்ல. தனி நபர் எடுத்த முடிவு. இதன் காரணமாகத் தான் கலந்து கொள்ளவில்லை.

***கேள்வி;-அண்மையில் " தனியார் காணிகளில் இருந்து படையினர் வெளியேற வேண்டும்" என்ற பிரேரணை வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்று நினைக்கின்றீர்கள்?***

***பதில்;-*** உண்மையில் தற்போது இலங்கைக்கு எதிராக சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. கட்டாயம் அவர்கள் (இராணுவத்தினர்) வெளியேறித்தான் ஆக வேண்டும். எங்களைச் சந்திக்க வருகின்ற சர்வதேச பிரதிநிதிகளிடம் தனியார் காணிகளில் படையினர் இருப்பதை ஆதார பூர்வமாக காட்ட வேண்டும். ஆனால் அதற்குரிய தரவுகளைப் பெறுவது கடினம். ஏனெனில் குறித்த தரவுகளைத் தர வேண்டிய அரச அதிகாரிகள் வடக்கு மாகாண சபையோடு இணைந்து ப்ணியாற்ற முன்வருவதில்லை.

குறிப்பாக படையினர் கைப்பற்றி வைத்திருக்கும் காணிகள் தொடர்பான விபரங்களைக் கூட தர மறுக்கின்றனர். இதன் காரணமாக இராணுவத்தினர் கைப்பற்றி வைத்துள்ள காணிகள் தொடர்பான முழு விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையே உள்ளது.



மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்ட திட்டத்தில் காணி அதிகாரம் மாகாணசபைக்குரியது. 13ஆம் திருத்தச் சட்டத்திலும் இதுவே காணப்படுகிறது.

மேடைகளில் நின்று கொண்டு "காணி உரிமை எங்களுக்கு வேண்டும்" என்று கோரிக்கை விடுவதால் பிரயோசனம் இல்லை . இதுவரையில் நாங்கள் "காணி அதிகாரம் எமது உரிமை அதனைத் தாருங்கள்" என்று எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவில்லை. இப்போது தான் முதல் முதலாக மாகாணசபை ஒன்றின் ஊடாக இவ்வாறான கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை உடனடியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பப்படும். அதனை நிறைவேற்றுவதும் நிறைவேற்றாமல் விடுவதும் அவருடைய விருப்பம்.

**வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் எந்த விதமான பிளவுகளும் கிடையாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பொறுத்த வரை இது நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு .**

**எனவே கருத்து வேறுபாடுகள் இருக்கத் தான் செய்யும் ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எந்த வேறுபாடுகள் இல்லை சில போராட்டங்களில் சிலர் கலந்து கொள்வார்கள் அது அவர்களுடைய அணுகுமுறையினை பொறுத்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வேட்டை: குருதிக்கணங்கள்

**அமைதிப்படை என்னும் பெயரோடு தமிழர் தாயகத்துக்கு வந்த இந்திய இராணுவம் நடாத்திய கோரத்தாண்டவத்தவங்கள் ஏராளம். அதில் இன்னும் ஆறாவடுவாக வலியை உண்டாக்குவது யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிகழ்ந்த படுகொலைகள்தான். இந்தியப்படையின் துப்பாக்கிச் சூட்டில், வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உட்பட இருபத்தியொரு பணியாளர்களும், நோயாளர் விடுதிகளில் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தியேழு நோயாளர்களுமாக, மொத்தம் அறுபத்தியெட்டுப் பேர் கொல்லப்பட்டார்கள். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் நாள் இந்திய இராணுவம் இந்த நரபலியை அரங்கேற்றியது. அந்தக் கோரச் சம்பவத்தில் தன் தந்தையை இழந்தவரின் கண்ணீர்ப் பதிவு இது.**

அப்போது எனக்குப் பதினைந்து வயது. பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு மூன்று தம்பிமார். யாழ்.நகரத்தில் இருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தில்தான் எங்களது வீடு இருந்தது. எங்கள் ஊரிலிருந்து ஏறத்தாழ ஏழு கிலோமீற்றர் தூரத்தில், இலங்கை இராணுவத்தின் முதன்மை இராணுவ முகாம்களில் ஒன்றான பலாலித் தளம் இருந்தது. அங்கு அடிக்கடி பெரும் சண்டைகள் நடக்கும்.

அவ்வாறான நேரங்களில், இராணுவத்தின் எறிகணை எங்கள் ஊர் மனையிலும் வீழ்ந்து வெடிக்கும்.

இதனால் எங்களது பல பகல், இரவுகள் பதுங்கு குழிக்குளேயே கழிந்தன.




**வந்தது இந்திய இராணுவம்**

அந்த நேரத்தில்தான் இந்தியா ஈழத்தமிழர்களுக்கு தீர்வு பெற்றுத்தர வரப்போகின்றது, அதற்காக இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனப் பரவலாகப் பேசப்பட்டது. சில நாள்களில் தமிழர் தாயகப்பகுதிக்கு வந்த இந்திய இராணுவம், இலங்கை இராணுவம் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம்களில் நிலைகொண்டது. இனிப்பிரச்சனையில்லை, அச்சப்படத் தேவையில்லை

இந்தியா எங்களைப் பாதுகாக்கும் என சந்தோசமடைந்தோம். ஆனால் அந்த சந்தோசம் சில நாள்கள் கூட நீடிக்கவில்லை.

**மீண்டும் பங்கர் வாழ்வு**

மீண்டும் எறிகணைச் சத்தங்கள், விமானக்குண்டு வீச்சுக்கள் என்ற பழைய அவல வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டோம். விமானங்களின் பயங்கர இரைச்சல்கள் முன்னரைவிட அதிக அச்சத்தைத் தந்தன.

சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத்தாக்குதலில் இருந்து பாதுகாக்க வீட்டில் நானும் தம்பிகளுமாகச் சேர்ந்து வெட்டியிருந்த பதுங்கு குழியை மீளத் துப்பரவாக்கினோம். இந்திய இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்கள் அகோரமாகவும் தொடர்ச்சியாகவும் இருந்த காரணத்தினால் சில இரவுகளும் பல பகல்களும் பதுங்கு குழிக்குள்ளேயே கழிந்தன.

**பாதுகாப்புத்தேடி...**

பணி நிமித்தம் அப்பா வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்தார். அன்றைய அசாதாரண சூழ்நிலையில் தொடர்ச்சியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவர், கிடைத்த சிறிய இடைவேளையில் எங்களைப் பார்க்க வந்தார். கலவரத்துடன் இருந்த எங்களது முகங்களைப் பார்த்த அவரது முகத்தில் மிகுந்த கவலை தென்பட்டது. ஏனெனில் எங்களைத் தனியே விட்டுச் செல்ல முடியாது. கடைசித்தம்பி அப்பாவைக் கட்டிப்பிடித்து அழுதான். சிறிது நேரம் யோசித்த அவர், எல்லாரும் என்னோட வந்து விடுதியில் தங்குங்கோ, வைத்தியசாலைதானே பாதுகாப்பாயும் இருக்கும் எனச் சொன்னார். நாங்களும் அப்பாவுடன் போவதற்குத் தயாரானோம். அப்போது என்னுடைய நண்பனிடம் நாங்கள் வைத்தியசாலைக்குச் செல்லும் விடயத்தை கூறினேன். அவன் தானும் எங்களுடன் வருவதாகக் கூறி, அவனுடைய பெற்றோரிடம் சொல்லிவிட்டு வந்தான். அத்துடன் உறவினர் ஒருவரின் மகளான பிரியாவும் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எங்களுடன் வந்தாள். மூன்று தம்பிகள், நான், அம்மா, மற்ற இருவரும் சேர்த்து மொத்தமாக ஏழு பேர் வைத்தியசாலையில் சென்று அப்பாவுடன் விடுதியில்தங்கினோம்.

**நகரில் மூண்ட சண்டை**

இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த முகாம்களில் ஒன்றான கோட்டை முகாம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது. அங்கிருந்து இராணுவம் முன்னேறுவதற்கு தனது கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அதனால் நகரம் மற்றும் நகரத்தை அண்டிய பகுதிகள் எங்கும் எறிகணைகள் சரமாரியாக வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.

வைத்தியசாலை பாதுகாப்பானது எனக் கருதியிருந்தாதலும், அங்கு கேட்டுக்கொண்டிருந்த கடுமையான எறிகணைச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் விமானப்படை தாழப்பறந்து நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களும் அச்சத்தையே தந்து கொண்டிருந்தன. ஆயினும் இராணுவம் வைத்தியசாலைக்குள் தாக்குதல் நடத்தாது என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தாலும் எறிகணைத் தாக்குதல்கள் செறிவாக நடைபெறும் போது, அப்பாவின் விடுதிக்கு அருகில் இருந்த கதிரியக்கப் பகுதி மற்றும் பிரதான அலுவலகத்தை உள்ளடக்கிய மேல்மாடிக்கட்டடத்திற்குள் போய் பாதுகாப்புத் தேடுவோம். இரவு வேளையில் பணியாளர்கள், நோயாளர்கள், விடுதியில் தங்கியிருந்தவர்கள் என எல்லோரும் அந்தக் கட்டடத்தின் நடைபாதையில் தான்படுப்போம்.

**நிரம்பி வழிந்த வைத்தியசாலை**

இராணுவத்தாக்குதலில் காயமடைந்து பல பகுதிகளில் இருந்தும் கொண்டுவரப்பட்ட பொதுமக்களால் வைத்தியசாலை நிரம்பியிருந்தது. நோயாளர் விடுதிக்குச் சென்று காயமடைந்து வரும் பொதுமக்களைப் பார்க்கும் போது மிகவும் அச்சமாக இருந்தது. பலர் கால் இழந்து கையிழந்து கொண்டுவரப்பட்டார்கள், சதைத்துண்டங்களாக வந்தவர்களைப் பார்க்கும்போது அச்சமாக இருந்தது. அப்பாவுக்கு நிற்க நேரமில்லை. நோயாளர் காவுவண்டியில் காயக்காரரை ஏற்றுவதும் இறக்குவதுமாக ஓடிக்கொண்டிருந்தார். அப்பா திரும்பி வந்துவிட வேணும் என பல கடவுள்களை வேண்டிக் கொண்டேன்.

**தீபாவளியில் தொடங்கிய வதம்**

தீபாவளித் தினமான அன்று கடுமையான எறிகணைத் தாக்குதல் களையும் விமானத்தாக்குதல்களையும் நடத்திக் கொண்டு முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டது இந்திய இராணுவம். எல்லோரும் வழமைபோல் கட்டிடப் பகுதிக்குள் சென்று பாதுகாப்புத் தேடினோம். எறிகணைத்தாக்குதல் குறைவாக இருக்கும் சமயங்களில் அம்மா ஓடிச்சென்று சமைத்தார். 11.30 மணியளவில் வெளி நோயாளர் பிரிவு இயங்கும் பகுதியில் செல்விழுந்து வெடித்தது. மத்தியானம் ஒரு ஓய்வு நேரம் பார்த்து அப்பா எங்களுக்கு சாப்பாட்டைக் குழைத்து உருண்டைகளாக்கித் தர, அந்தக் கட்டடத்தின் ஓரத்தில் நின்று சாப்பிட்டோம்.எங்களுக்கு குழைத்துத் தந்து விட்டு, அப்பா தானும் சாப்பிட்டார். மீண்டும் எறிகணைத் தாக்குதல் அதிகமாக, உணவை முடித்த உடனேயே நாங்கள் கட்டடங்களுக்குள் சென்றுவிட்டோம்.

சிறிது நேரத்தின் பின் ஒரு எறிகணை எட்டாம் இலக்க நோயாளர் விடுதியின் மீது வீழ்ந்து சிதறியதால் அங்கிருந்த நோயாளிகள் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இதனால், அலுவலகக்கட்டிடப் பகுதிக்கு அருகிலிருந்த நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களையும் அந்தக் கட்டடத்துக்குள் கொண்டு வந்து சேர்த்தார்கள். எழுந்து நடக்க முடியாதவர்களை தள்ளுவண்டிகளிலும் தோள்களிலும் சுமந்து கொண்டுவந்து மெத்தைகளை நிலத்தில் போட்டு படுக்க வைத்தனர். அதில் சிலர் சேலைன் மருந்து ஏற்றியபடியே கொண்டுவந்து விடப்பட்டனர். இதனால் அந்த இடம் நோயாளர்கள், வைத்தியர்கள், பணியாளர்களினால் நிரம்பியிருந்தது.

கோட்டையிலிருந்த இராணுவம் நகருக்குள் முன்னேறி வந்துவிட்டதாக எல்லோரும் பேசிக்கொண்டனர்.

**வந்தார்கள் யமதூதர்கள்**

கிட்டத்தட்ட நான்கு மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் மிக அண்மையில் கேட்கத் தொடங்கியது. வைத்தியசாலை வளாகத்துக்குள் நுழைந்த இராணுவம் நாம் இருந்த பகுதியை நோக்கிச் சுட்டுக்கொண்டு வந்தது. எல்லோரும் சத்தமிட்டவாறே ஆளுக்காள் தள்ளுப்பட்டுக் கொண்டு ஓடினார்கள், நோயாளர்கள் செய்வதறியாது கத்தினார்கள். தம்பிக்கு பக்கமாக இருந்த சுவரில்துப்பாக்கிவேட்டு ஒன்று பட்டுத் தெறித்தது. இராணுவம் வைத்தியசாலைக்குள் வந்தால் அவர்களுடன் பேசலாம் என நம்பிக்கையுடன், வைத்தியசாலைச் சீருடையணிந்து முன்னுக்கு நின்ற பணியாளர்கள் பிணங்களாகச் சரிந்து கொண்டிருந்தார்கள். தம்பியை இழுத்துக் கொண்டு வந்த அம்மா என்னைகதிரியக்கப் பகுதிக்கு எதிர்ப்பக்கம் தள்ளிவிட்டார். நானும் நண்பனும் ஒரு அறைக்குள் செல்ல.பின்னுக்கு வந்த அம்மாவும் தம்பியும் அறைக்குள் நுழைய முயற்சித்தனர் அது முடியாமல் போக எதிர்ப்பக்கமாக இருந்த அறைக்குள் செல்ல எத்தனித்தார், அதுவும் முடியவில்லை. உடனே அந்தக் கொறிடோரில் விழுந்து படுத்து விட்டனர்.

**கொலையுதிர் காலம்**

அதேசமயம் அந்த இடத்தில் வீழ்ந்து வெடித்த கைக்குண்டில் பிரியா காயமடைந்து விழுந்தாள். தொடர்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் வைத்தியசாலை வளாகத்தை அதிர வைத்துக் கொண்டிருந்தன. ஐயோ! ஐயோ! என்ற கூக்குரல்கள் முருகா!

முருகா! நல்லூரானே! அம்மாளாச்சி காப்பாற்று காப்பாற்று என எல்லா குலதெய்வங்களையும் கதறி

அழைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் வி ஆர் சிவிலியன்ஸ், வி ஆர் சிவிலியன்ஸ்என்ற சத்தங்களும் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தன. மக்களின் கதறல்கள் எதையும் செவிமடுக்காத அமைதிப்படையின் கொலை வெறியாட்டம் ஒரு மணித்தியாலமாகத் தொடர்ந்தது. ஒரு மணித்தியாலத்தின் பின் மக்களின் அழுகுரல் சத்தங்களும் துப்பாக்கிச் சத்தமும் அடங்கிக் கொண்டு போயின. அந்தி சாய்ந்து, இருள் கவிழ்ந்தது. கீழ்த்தளப்பகுதியில் உள்ளவர்கள்

கொல்லப்பட்டுவிட்டதாக எண்ணியிருந்தனரோ என்னவோ! அங்கு படையினர் நடமாட்டம் குறைந்து, மேல்மாடியில் வைத்தியர்கள் தங்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பகுதியில் படையினரின் நடமாட்டம் கூடுதலாக இருந்தது.

**பிணங்களோடு பிணங்களாக...**

அத்துடன் அங்கிருந்து வெளிப்பகுதியை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். இந்தியப்படையின் ஹிந்தி உரையாடல்கள் இராணுவ சப்பாத்துச் சத்தங்களைத் தவிர, வளாகத்தில் மயான அமைதி நிலவியது.

எங்களுக்கு வெளியே என்ன நடந்தது என்று தெரியவில்லை, என்ன செய்வதென்றும் புரியவில்லை.

கொறிடோர்ப் பகுதியில் இருந்த அம்மாவுக்கும் தம்பிக்கும் என்ன நடந்தது? காயமடைந்த பிரியா எப்படியிருக்கின்றார்?அப்பாவுக்கு என்ன நடந்தது?அப்பாவுடன் இருந்த தம்பிகளுக்கு என்ன நடந்தது?எந்தக் கேள்விகளுக்கும் விடை தெரியாமல் பயத்தில் உறைந்து போய் இருந்தோம்.

அங்கிருந்து வெளியேறிச் செல்ல முடியாது. இடையிடையே கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் காதைப் பிளந்தன. அறை வாசலில் இருந்து மெதுவாக தலையை நீட்டி கொறிடோரில் இருந்த அம்மாவும் தம்பியும் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்தேன். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை.

அந்த இடத்தில் பலர் படுத்திருந்தார்கள். எல்லோருமே பிணங்களுடன் பிணங்களாகப் படுத்திருந்தனர்.

சத்தமாகவும் பேசமுடியாது. மெதுவாக இது அம்மாவா? தம்பியா? என தவழ்ந்து சென்று விசாரித்தேன்.

பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் போடாமல் படுத்திரு, அசைவு தெரிந்தால் சுடுவாங்கள் என்று சொன்னதால் எனது தேடலை தொடர முடியவில்லை. அப்படியே படுத்தேன், மனது வலித்தது.

ஒவ்வொரு நிமிடமும் கனமாக இருந்தது.

**மறுநாளும் மரண வாசம்**

மறுநாள், மரணத்தின் கணங்களுடன் விடிந்தது காலைப்பொழுது. மோசமான இரத்த வாடையும் வெடிமருந்தின் மணமும் காற்றில் பரவி நின்றன. அம்மாவும் தம்பியும் எங்காவது கண்ணில் தென்படு கின்றார்களா? என எட்டிப்பார்த்த போது கொறி டோரின் முடிவில் அம்மாவும் தம்பியும் வேறு பலரும் படுத்திருந்தது தெரிந்தது. காயப்பட்ட பிரியா அம்மாவுக்கு முன் படுத்திருந்தார். அவர்களுக்கு முன்னுள்ளவர்கள் கொல்லப் பட்டி ருந்தனர். சிலர் காயத்துடன் கிடந்தனர். எல்லோரும் பிணங்களுடன் பிணங்களாகவே கிடந்தனர்.

**பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் போடாமல் படுத்திரு, அசைவு தெரிந்தால் சுடுவாங்கள் என்று சொன்னதால் எனது தேடலை தொடர முடியவில்லை. அப்படியே படுத்தேன், மனது வலித்தது. ஒவ்வொரு நிமிடமும் கனமாக இருந்தது.**

அடுத்தது என்ன நடக்குமோ! கொல்லப்பட்டுவிடு வோமா! என்ற அச்சம் ஒன்றுசேர, ஒருவரையொருவர் நிசப்த மற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம். நான் தலையை சற்று உயர்த்தி அம்மாவின் கண்களைப் உற்றுப்பார்த்தேன். அம்மா தம்பியை கட்டிப்பிடித்துக் கொண்டு ஒரு வாங்குக்கு கீழே அசைவற்றுப் படுத்திருந்தார். என்னைப் பார்த்ததும் சிறு நிம்மதி அவரின் முகத்தில் தெரிந்ததுடன் உதட்டசைவில் கவனம் என சொன்னார். அதையும் தாண்டி, ஏக்கம், பயம் கலந்த பரிதவிப்பு அவரின் முகத்தில் தெரிந்தது. கொறிடோரில் கொல்லப்பட்டிருந்த பிணங்களைக் கடந்து இராணுவம் வரவில்லை. அதனால் பின்னால் இருந்தவர்கள் உயிர்தப்பியிருந்தனர்.

**இந்தியப் படையின் எக்காளம்**

மேல் தளத்தில் இந்தியப்படையினர் கதைக்கும் சத்தங்களும் சிரிப்பொலிகளும் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்தன. பத்து மணியளவில் இந்திய இராணுவத்துக்கும் சிலருக்கு மிடையில் சம்பாசணை நடை பெறு வதை கேட்க முடிந்தது. இங்கு நோயாளர்களும் ஊழியர்களும் மட்டுமே இருக்கின்றனர்.

அவர்கள் அனைவரும் பொதுமக்கள் என ஆங்கிலத்தில் தெளிவுபடுத்தப்படுகின்றது. மனதுக்குள் ஒரு சிறுதுளி நம்பிக்கை கீற்று. நாங்கள் காப்பாற்றப்படலாம். யாரோ எங்களுக்காக கதைக்கின்றனர் என்ற நினைப்பு சிறு தெம்பைத்தந்தது. சற்று தலையைத் தூக்கிப்பார்த்துக் கொண்டிருந்தபோது வைத்தியசாலைச் சீருடையுடன் நால்வர், இந்திய இராணுவச் சிப்பாய்களிடம் யாராவது உயிருடன் எஞ்சியிருந்தால் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையில் கதைத்துக் கொண்டிருப்பதாக புரிந்துகொண்டேன். அப்போது இராணுவத்தினர் ஆய்ுதங்களின்றியே (ஏறக்குறைய எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற நினைந்திருந்தனர் போலும்) கதைத்துக் கொண்டிருந்தனர். திடீரென ஒரு சீக்கிய இராணுவத்தினன் மேல்மாடிக்குச் ஓடிச்சென்றான். திரும்பி வந்தவன் கையில் துப்பாக்கி.

**நம்பிக்கையைத் தின்ற துப்பாக்கி**

வந்த வேகத்தில் அவர்களை நோக்கிச் சுடத்தொடங்கினான். முதலில் தாதி இரண்டாவதாக வைத்தியர்; பின்னர் மற்றைய தாதி தொடர்ந்து மற்றைய ஊழியர் என வரிசையாகச் சுட்டான். வைத்தியர் சூடுபட்டு விழும் போது முருகா என்ற சத்ததுடன் விழுந்து இறந்தார். அந்தச் சம்பவம் எமக்கு ஏற்பட்ட சிறு நம்பிக்கையை மட்டுமல்ல அவர்களின் உயிரையும் சேர்த்துப் பறித்தது. மக்களுக்காக கெஞ்சிக் கொண்டிருந்த அவர்களது உடல்கள் தொப் என்று விழுந்து இரத்தத்தில் குளித்தன. அங்கு அசைவின்றிப் படுத்திருந்த மக்களின் வற்றிய கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் வடிந்தன. அதில் சூடுபட்ட ஒருவர் பஞ்சபுராணமும் சிவபுராணமும் பாடிய படியே கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலங்களின் பின் இறந்து போனார்.

**ஏன் கொல்லப் படுகிறோம்?**

நாம் ஏன் கொல்லப்படுகின்றோம் என்று புரியவில்லை. கொல்லப்பட்டவர்கள் நோயாளிகளும் வைத்தியசாலை ஊழியர்களும் என்பதை உறுதிப்படுத்துவதில் யாருக்கும் சிரமம் இருக்காது.

மதியத்தைத் தாண்டியும் அங்கு எந்த மாற்றமும் இல்லை. அப்படியே இருந்தோம்.

மாலைவேளையில் ஒரு பெண்ணின் அழுகுரல் சத்தம் கேட்டது. இங்கு நோயாளர்களும் வைத்தியர்களும் வைத்தியசாலை ஊழியர்களும் தான் இருக்கிறார்கள் எனக்கூறி கதறி அழுதது அந்தப் பெண்குரல். தொடர்ந்து இராணுவத்தினர் கதைக்கும் சத்தமும் கேட்டது.

**வெளியால வாங்கோ**

நம்பிக்கையின்றி, எங்களுக்காக இருன்னுமொரு உயிரா! என எண்ணிக் கொண்டிருந்த வேளை, அந்தப் பெண் (அவர் ஒரு வைத்தியர்)அழுகையுடன் தப்பியிருப்பவர்கள் கையை உயர்த்திக் கொண்டு வெளியில் வாங்கோ எனச் சொன்னார். என்ன செய்வதென்று புரியவில்லை. மருத்துவர் பொன்னம்பலம் உட்பட பல வைத்தியர்களும் அந்த அறையில் இருந்தனர். அடுத்து என்ன நடக்கப் போகின்றது எனத் தெரியாமல் எழும்பி நடக்கத் தொடங்கினார்கள். நானும் கைகளை உயர்த்திக் கொண்டு பார்க்க, அந்தக் கொறிடோரில் இறந்த உடல்கள் இங்குமிங்குமாகக் கிடந்தன. ஒருவருக்கு மேல் ஒருவர் வீழ்ந்து கிடந்தனர். கால்வைத்து நடக்க இடமில்லை, இரத்தம் உறைந்து சேறு போல இருந்தது. அம்மாவும் தம்பியும் எழுந்து கையை உயர்த்திக் கொண்டு நின்றனர். முன்பக்கம், மேல்மாடிப் படிகளுக்கு அருகில் கிடந்த பிணங்களுக்கிடையில் வைக்கப்பட்டிருந்த பரலின்மேல் கொக்கோக்கோலாக் கேஸ்ஒன்று இருந்தது. அதற்கு அருகில் சீக்கியச் சிப்பாய் துப்பாக்கியை உயர்த்தியபடி நின்றான். சோடா



அபிலாஷ்

**இரத்த வெள்ளத்தில் பயணம்**

குடிச்சுக்குடிச்சுத்தான் எல்லோரையும் இரவிரவா சுட்டிருக்கிறானா! என நினைத்தேன். இரத்த வெள்ளத்தில் படுத்திருந்திருந்த பிரியா பலவீனமான குரலில் கூப்பிட்டார். அவரை நோக்கி அடி எடுத்து வைக்க முன்னர், துப்பாக்கியை நேரே பிடித்தபடி நின்ற இந்திய சீக்கியப்படையினன் நட என அதட்ட, கண்களினால் ஆற்றாமையையும் பயத்தையும் வெளிப்படுத்தி எந்த நம்பிக்கையுமற்று எல்லோருடனும் கையை உயர்த்திக் கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

கொறிடோரின் வாசலில் பலர் கும்பிட்டபடியே இறந்திருந்தனர். நோயாளர் வண்டி ஒன்றில் தனது குழந்தையை கிடத்தியிருந்த தாய் அந்தக் குழந்தையை கட்டிப்பிடித்த படியே இறந்து போய் கிடந்தார்.

அம்மாவும் நானும் மூன்றாவது தம்பியும் நண்பனுமாக இருபத்தி ஆறாவது வாட்டுக்குள் வந்து சேர்ந்தோம். அப்பாவும் இரண்டு தம்பிகளும் வரவில்லை.

**குப்புறக்கிடந்த அப்பா**

கும்மிருட்டு, ஆங்காங்கு சடலங்கள், அப்பா இருந்த அலுவலகத்துக்குச் சென்று, டோர்ச் வெளிச்சத்தில் தேடிப் பார்த்தபோது அப்பாவின் உடல் குப்புற கிடந்தது, அப்பா படுத்திருக்கிற மாதிரியே கிடக்கிறார் என அம்மா கத்தியழுதார். மெதுவாகத் தொட்டுத் திருப்பினேன். நெத்தியில் குண்டுபட்டு முகம் வீங்கியிருந்தது. நாக்கை பற்களால் கடித்தபடி இருந்தார். இறந்து போயிருந்த அவரின் சடலத்தின் மேல் தலையை அடித்து அம்மா அழுதார். அழுது கொண்டே தம்பிகள் எங்கேயென்று கேட்டுக் கதறினார்.

கடைசித்தம்பி காயப்பட்டிருந்ததாகச் சொன்ன இடத்தைப்பார்த்தேன். அதில் அவனைக் காணவில்லை, அந்த இடத்தில் உடலை இழுத்தால் வரும் அடையாளம் போல நிலத்தில் உறைந்திருந்த இரத்தத்தில் அடையாளம் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லை.

மறுநாள் விடிந்ததும் அங்கிருந்த சடலங்களை வைத்தியசாலையின் பிணவறைக்குப் பக்கத்தில் இருக்கும் பின்பக்க பாதைக்கருகில் போட்டு எரிப்பதற்கு இந்திய அமைதிப்படை தீர்மானித்தது.

**சுடுகாடான வைத்தியசாலை**

கட்டைகளை அடுக்கி சடலங்களை அதற்கு மேலே கொண்டு வந்து வைக்கச் சொன்னார்கள். நான் முதற்பிள்ளை என்பதால் அப்பாவுக்கு கொள்ளி வைக்க அனுமதி வாங்கித்தருமாறு கேட்டேன்.

வைத்தியர்கள் இருவர் இராணுவத்துடன் கதைத்து அதற்கான அனுமதியைப் பெற்றுத் தந்தார்கள்.

அப்பாவின் சடலத்தை நோயாளர் தள்ளுவண்டியில் வைத்து வைத்திய சாலை ஊழியர்களுடன் நானும் தம்பியும் சேர்ந்து தள்ளிக்கொண்டுபோய் பிணவறைக்கு அருகில் நின்றோம். ஒவ்வொரு உடலையும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டுவந்தனர் அதில் பலரும் தெரிந்தவர்கள். இறுதியாக ஏற்கனவே இறந்து பிணஅறையில் இருந்தவர்கள் உட்பட எண்பதிற்கும் மேற்பட்ட சடலங்களும் ஒன்றாக, குவியலாக அடுக்கப்பட்டன. அதில் ஒரு ஓரத்தில் அப்பாவின் உடலை தனியாக கிடத்தி நெஞ்சாங்கட்டையை நானும் தம்பியும் வைத்தோம். இந்தியச் சிப்பாய் ஒருவன் பேப்பரில் நெருப்பைக் கொளுத்தி அப்பாவுக்கு கொள்ளி வைக்கத் தந்தான். நான் அப்பாவுக்கு கொள்ளி வைத்து விட்டு திருப்பி அதை கொடுக்க, அந்தப்பிணக்குவியலைச் சுற்றி நெருப்பு வைக்குமாறு கூறினான். நானும் அவ்வாறே அப்பாவுடன் சேர்த்து அனைத்துச் சடலங்களுக்கும் நெருப்பை வைத்துவிட்டு தம்பியையும் கூட்டிக்கொண்டு வந்தேன். அனைத்து சடலங்களும் ஒன்றாக எரியூட்டப்பட்டன. பின்னர், பிற்பகல் வேளை, அப்பாவுடன் வேலை செய்த ஒருவரின் துணையுடன் அஸ்தி எடுக்கச் சென்றேன். அங்கு சென்று அஸ்தி எடுத்தேன். நேற்று சோறு ஊட்டிய என் அப்பாவை சாம்பலாக எடுத்து பத்திரப்படுத்தி அம்மாவிடம் கொடுத்தேன்.


**மீண்ட சோதரர்கள்**

அதன்பின் வந்த வைத்தியர் ஒருவர் தம்பிமார் இருவரும் நல்லூரில் இருக்கும் விடயத்தைச் சொன்னார். எங்களை வைத்தியசாலையிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, அம்மா நல்லூர் கோயிலுக்குப் போய் அவர்கள் இருவரையும் கூட்டிக் கொண்டு வந்தார். எத்தனை வருடங்கள் கழிந்தாலும் அந்தக் குருதிக் கணங்கள் நெஞ்சை விட்டு அகலுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரடி சாயி பாபா, எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்

# சாயியே சரணம்



## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் - 34

பொதுவாக ஹரிதாஸர்கள் கீர்த்த னைகள் செய்யும் போது, மகிழ்வு நாள் உடைகளையும் அணிகிறார்கள். 'பேடா' வோ, 'டர்பனோ' ஏதோ ஒரு 'தலை அணி' அணிந்து கொள்கிறார்கள். நீளமான அலை மோதும் கோட், உள்ளே ஒரு சட்டை, தோள்களில் அங்கவஸ்த் திரம், இடுப்புக்குக் கீழே வழக்கமான நீள வேட்டியும் அணிகிறார்கள். சீரடி கிராமத் தில் ஏதோ ஒரு கீர்த்த னைக்காக தாஸ்காணு ஒரு முறை இவ்வாறாக உடையணிந்து பாபா விடம் வணங்குவதற்காகச் சென் றார். பாபா "நல்லாருக்கு மாப்பிளே! இவ்வளவு அழகாக உடைய ணிந்து நீ எங்கே சென்று கொண்டிருக் கிறாய்?" என்று கேட்டார். "கீர்த்தனை செய்வதற்கு" என்று பதில் வந்தது. அப்போது பாபா "இந்தச் சிறு அங்கவஸ்திரம், குல்லாய் முதலியன எல்லாவற்றையும் எனக்கு முன்னால் கழற்றிவிடு" என்று கூறினார். தாஸ் கணு உடனே எடுத்து பாபாவின் பாதத்தடியில் அவற்றை வைத்தார். அதிலிருந்து கீர்த்தனை செய்யும் போது தாஸ்காணு இவற்றையெல் லாம் அணிவதில்லை. இடுப்புக்கு மேல் அவர் ஒன்றும் அணிவதில்லை. கைகளில் ஜதை சபளாக் கட்டை, கழுத்தில் ஒரு மாலை இவற்றுட னேயே எப்போதும் இருந்தார். எல் லாப் பாடகர் களும் கைக்கொள் ளும் முறையுடன் இது ஒத்ததாக இல்லை. ஆனால் படைத் துரு வாக்கிய நாரத ரிஷியே மேல் உடம்பிலும் தலை யிலும் ஏதும் அணியவில்லை. தம் கையில் வீணை யேந்தி இடந் தோறும் அலைந்து திரிந்து கடவுளின் புக ழைப் பாடினார்.

**சர்க்கரை இல்லாத தேநீர்**

பூனா, அஹமத்நகர ஜில்லாக் களில் பாபா அறிந்து கொள்ளப்பட்டார். ஆனால் திரு. நானாஸாஹேப் சாந் தோர்கர், தனது சொந்த தனிப்பட்ட முறையிலான உரை யா டல்களாலும் , தாஸ்காணு தனது மிக உயர்வான கீர்த்தனைகளாலும் கொங்க ணத்தில் (பம்பாய் ராஜதானியில்) பாபாவின் புகழைப் பரப்பினார்கள். உண்மையில் தாஸ்காணுதாம் - அவ ரைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக - தது அழகிய, ஒப்புவமையற்ற கீர்த்தனை களால் அங்கேயிருந்த ஏராளமான மக்க ளுக்கு, பாபாவினால் பயனுறும் படி செய்தார். கீர்த்தனை களைக் கேட்க வந்த மக்கள் வெவ்வேறு சுவையுள் ளவர்களாய் இருப்பர். சிலர் ஹரிதா ஸின் அறிவாழத்தை அல்லது புலமை யை விரும்புவர். சிலர் அவரது அபி நயங்களையும் சிலர் அவரது பாடலை யும் சிலர் அவரது விகட நகைச் சுவைகளையும் சிலர் அவரது முக்கிய கதைகளை யும் பலர் பலவிதமாக ஆர்வம் கொண்டிருப்பர். அவர்களுள் மிகச் சிலரே கீர்த் தனை களைக் கேட்டதன், வாயிலாக ஞானிகளிடத்தோ, கடவுளிடத்தோ, நம்பிக்கையும்,பக்தியும் பெறுகி றார்கள். ஆயினும் தாஸ்காணு வின் கீர்த்தனை களைக் கேட்கும் அவையோர் களது மனங்களின் விளைவு மின்சாரமாகும். அது அங்ஙனமே இருந்தது. கீழ்க் கண்ட ஒரு நிகழ்ச்சியை இங்கு தருகிறோம்.

தாஸ்காணு ஒரு முறை தாயே வில் கௌபீனேச்வர் கோயிலில் ஸாயி பாபான் புகழைப் பாடி கீர்த்தனை செய்து வந்தார். அவையோர்களுள் சோல்கர் என்பவர் சிவில் கோர்ட் டில் ஒரு தற்காலிக ஊழியராக வேலை பார்த்து வந்த ஏழை ஆவார். மிகவும் கவனத் துடன் தாஸ்கணுவின் கீர்த்தனையை அவர் கேட்டுப் பெரிதும் உருகிப்போனார். அவர் அங்கேயே அப்போதே மனத்தி னால் பாபாவுக்கு வணக்கம் செலுத்தி விரதம் எடுத்துக் கொண்டு பின்வருமாறு கூறினார்.

(ஞானத்தை தேடுவோம்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 642

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | 5 | 6 |
| | | 7 | | | | | |
| 8 | 9 | | | | 10 | | |
| 11 | | | | 12 | | | 13 |
| | | | 14 | | | 15 | |
| 16 | | 17 | | | 18 | | |
| | | 19 | | 20 | | | |
| 21 | | | | 22 | | | |

**மேலிருந்து கீழ்**

1- கணவன்-மனைவி.
2-நட்டத்தையும் இழப்பையும் சந்திக்கும் நிலை.
3-நாள்.
4-முன்னைய நிறுவை அளவீடொன்று.
5-ரூபாயில் நூறு.
6-சாப்பிடு.
9-சாவி.
12-பூக்களைக் கொண்டு உருவாக்குவது.
13-தாய் தகப்பன் பிள்ளைகள் அனைவரும் சேர்ந்த அலகு
14-சமையல் அறையில் காணப்படும் ஒரு கருவி.
15-நடந்து செல்லுமாறு விடுக்கப்படும் பணிப்பு.
16-இந்த மாவில்தான் இப்போது இங்கு வாழ்க்கை.
17-சோற்றுக்கு சுவையூட்டுவது.
18-தங்குமிடம்
20- ஈரலிப்பான இடத்தில் வளருவது.

**இடமிருந்து வலம்**

1-உழைத்துப் பெறு.
4-அலுப்பால் வருவது.
7-செல்வந்தன்.
8-பத்துப் பாடல்களைக் கொண்டது.
10-தமது என்பதைக் குறிக்கும்.
11-உயர்வானது . மேன்மையானது .உறுதியானது என்பதைக் குறிக்கும்.
12-நெஞ்சுப் பகுதி.
14.இது ஓய்வதில்லை.
15-மத்தி.
16-கோயிலை அடையாளப்படுத்துவது.
18-நஞ்சு.
19-சாப்பிடும் உணவு உடலில் சேர்வது இதன் மூலம்.
21-மத்தியபுள்ளி.
22.சேதமுற்ற பின் எஞ்சுவது.

போட்டி இல. 642

அனுப்புபவர் பெயர்:-----------------------------------
விலாசம்:------------------------------------------
------------------------------------------------
கையொப்பம்:----------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

■ சொற்சிலம்பம் போட்டி 642ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29.ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே நவம்பர் 05.ஆம் மற்றும் நவம்பர் 12 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவல கத்திலும், **நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா** ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**தி. பிரியதர்சினி,**
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

**கரவை சி. இராசரத்தினம்,**
பூம்பொழில் திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

**ச.முருகநேசன்,**
203,பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

**வ.ஆ. அதிரூபசிங்கம்,**
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

**ச. அன்ரனி**
புதுக்குளம்,
கனகராயன்குளம் தெற்கு,
கனகராயன்குளம்.

### போட்டி இல 639இல் பரிசு பெற்றோர்

1 **பொன். கபிலாயபிள்ளை,** இல 77, 2ஆம் பகுதி, விசுவமடு மேற்கு, விசுவமடு.

2 **த. சிறிதரன்,** சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

3 **சி.கிஷ்ணவேள்,** வ/பெரிய கோமரசங்குளம் -மகாவித்தியாலயம். வவுனியா.

### சொற்சிலம்பம் போட்டி 640இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.திராட்சை
2. ருசி
3.தரணி
4.தையல்
5.அன்னாசி
8.தர்மம்
9.தடித்த
11.வசனம்
12.வன்மம்
14.தருமன்
15.காதல்
17.திமில்
19.மீன்

**இடமிருந்து வலம்**

1. திருத்தந்தை
6. ராசி
7.யமன்
8.தணிதல்
10.சைவ
12.வசி
13.சமர்த்தன்
15.கானம்
16.தருமதி
18.தம்
20.மம்மி
21.மன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமரன்

2ஆம் லெப்.சங்கர்

# சாவுக்குள் வாழ்ந்தவன்



விடுதலைப்புலிகள் அமைப்பில் உயிர் நீத்த முதல் போராளி. சாந்தம் தவழும் முகத்தோடு மெல்லிய புன்னகையை ஏந்திக் கொண்டு நிற்கும் சங்கரைத்தான் பலருக்கும் தெரியும். ஆனால் அந்த உருவத்துக்கு முற்றிலும் எதிர்மாறான ஆக்ரோஷமான போராளி அவன்.

இயக்கத்தின் ஆரம்ப காலங்களில் மிகக்குறைந்த ஆளணியோடு நடத்தப்பட்ட பல தாக்குதல்களை தலைமையேற்று நடத்திய தளபதி அவன் என்ற உண்மை பலருக்குத் தெரியாது.

1961 ஆம் ஆண்டு கம்பர்மலையில் பிறந்த சங்கரின் இயற்பெயர் சத்தியசீலன். பெயரைப் போலவே அவனும் சத்தியத்துக்காகவே வாழத் தொடங்கினான்: பேரினத்தால் தமிழ் மக்கள் படுகின்ற இன்னல்கள் அவனுக்கு சத்திய சோதனையாக தெரிந்தன. எதிரி என்ன ஆயுதத்தை கையிலெடுக்கிறானோ அதையே நாமும் எடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. "அகிம்சை எல்லாம் இனிமேல் சரிவராது அடித்தால் தான் இவர்கள் திருந்துவார்கள்" என்று தீர்மானித்ததும் புலிகளோடு இணைய முடிவெடுத்தான்.

அமைப்பில் இணைந்த சங்கர் தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவனாக மாறினான். அந்தக் காலத்தில் ஆளணி மட்டுமல்லாது ஆயுதங்களுக்கும் மிகப் பெரிய தட்டுப்பாடு. எனவே ஒரு சிலருக்கு மாத்திரமே ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டது. அப்படி முதன்முதலில் ஆயுதப்பயிற்சி பெற்றவர்களில் சங்கரும் ஒருவன்.

மகாபாரதப் போரில் பாண்டவர்களின் வெற்றிக்கு அச்சாணியாக விளங்கியவர் கிருஷ்ணர். அவர் அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக வந்திருக்காவிடின் கர்ணனின் நாகாஸ்திரம் அர்ச்சுனனின் தலையைக் கொய்திருக்கும். மகாபாரதப் போரின் முடிவே தலைகீழாக மாறியிருக்கும். ஆனால் கிருஷ்ணனின் அசாத்தியமான சாரதித்துவம் அர்ச்சுனனுக்கு மட்டுமல்லாது பாண்டவர்சேனைக்கே வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

அதே போன்று இயக்கத்துக்கும் சாரதியாகச் செயற்பட்டு பல களங்களை வென்று காட்டியவன் சங்கர். மேடோ. பள்ளமோ, வெள்ளமோ. இருட்டோ எதுவென்றாலும் அலட்டிக் கொள்ளாமல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் வாகனங்களை கொண்டு சேர்க்கும் வல்லமை கொண்டவன். இதனால் தான் பல தாக்குதல்களை மேற்கொண்டு விட்டு சோதனைச் சாவடிகளைத் தாண்டி ஆயுதங்களோடு புலிகள் தங்களுடைய ரகசியத் தளங்களுக்கு திரும்ப முடிந்தது.

களமுனையில் சங்கர் செய்த சாகசங்களை விபரித்தால் பக்கம் பக்கமாக சொல்லிக் கொண்டே போகலாம்.

சங்கரின் துணிச்சலான சாரதித்துவம் வெளிப்பட்டது நீர்வேலி வங்கிக் கொள்ளையின் போது தான். ஆரம்பகாலங்களில் போராளிகளுக்கு உணவு ,உடை,ஆயுதம்,மருந்து என்பவற்றை வாங்குவதற்கு பணமில்லை. எனவே அவர்கள் தேர்ந்தெடுத்த வழி தான் வங்கிக் கொள்ளைகள்.

குட்டிமணி ,தங்கத்துரை ஆகிய மூத்த போராளிகள் நீர்வேலி வங்கியில் இருந்து செல்லும் பணத்தை கொள்ளையிடுவெதன்று முடிவெடுத்தார்கள். இதற்காக சில நாள்கள் வேவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திட்டம் தீட்டப்பட்டது. இந்தத் நடவடிக்கையின் முக்கிய பொறுப்பு புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு வழங்கப்பட்டது. அவரின் சாரதியாக வாகனத்தை ஓட்டியவர் சங்கர்.


வாகனத்தில் பிரபாகரன் பிஸ்ரலோடு காத்திருக்க இரையைத் தேடி கண்களை அங்குமிங்கும் அலையவிட்டபடி இருந்தான் சங்கர். இரை நெருங்கத் தொடங்கியது.

(சாகசங்கள் தொடரும்)

# குசேலருக்கு பெரு வரவேற்பு



நமக்கான பாரம்பரியங்களை இன்னமும் அழியவிடாமல் காத்துக் கொண்டிருப்பவை கலைகள் தான். இந்த வகையில் ஈழத்தமிழர்களின் வாழ்வியலில் இசை நாடகங்களுக்கு முக்கிய இடம் உண்டு. ஆயினும் மட்டுப்படுத்தப்பட்ட எழுத்துருக்களே இருப்பதால் குறிப்பிட்ட சில இசை நாடகங்களையே மீள மீள பார்க்க வேண்டிய நிலை இருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக ஒரே எழுத்துருவை அடிப்படையாகக் கொண்ட இசை நாடகங்களைப் பார்ப்பதால் இளைய தலைமுறை இரசிகர்களிடையே சலிப்பு நிலையும் ஏற்படும். எனவே இதற்கான தீர்வாக புதிய இசைநாடகப் பிரதிகள் உருவாக வேண்டும்.



இந்த முயற்சியில் திருமறைக்கலாமன்றம் இறங்கியிருக்கிறது. குசேலர் என்ற புதிய இசை நாடகத்துக்கான் நாடகத்துக்கான எழுத்துருவை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் படைத்துள்ளார். குசேலர் இசை நாடகம் திருமறைக்கலாமன்றக் கலைஞரான இ.ஜெயகாந்தன் நெறியாள்கையில் நாட்டின் பல பாகங்களிலும் மேடையேறி பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் உலக அழகி



உலக அழகி ஐஸ்வர்யாராய் குழந்தை பெற்றுக் கொண்டதோடு சினிமா உலகில் இருந்து ஒதுங்கியிருந்தார். இனிமேல் அவர் சினிமா பக்கமே வரமாட்டாரா என்ற ஏக்கத்தில் ரசிகர்கள் காத்திருந்தனர். இந்த நிலையில் சஞ்சய் குப்தா இயக்கும் 'ஜாஸ்பா' என்ற ஹிந்திப் படத்தின் மூலம் மீண்டும் நடிக்கவருகிறார் ஐஸ்வர்யாராய். இனிமேல் ஐஸ் ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தானே.

ஒரு காலத்தில் தமிழ்த் திரையுலகில் கொடி கட்டிப் பறந்தவர் மனீஷா கொய்ராலா. இந்தியன், முதல்வன், உயிரே, பம்பாய் போன்ற வெற்றிப் படங்களில் நடித்தவர். இந்த நிலையில் மனீஷா கொய்ராலாவை புற்று நோய் தாக்கியது. ஆனாலும் அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக் கொண்டதால் தற்போது புற்று நோய் தாக்கத்திலிருந்து பெருமளவில் மீண்டுவிட்டார் மனீஷா கொய்ராலா. அத்தோடு போதிய உடற்பயிற்சிகள் மூலம் உடலையும் கட்டுக்கோப்பாக மாற்றி விட்டார். "நான் மறுபிறவி எடுத்திருக்கிறேன். வாழ்வில் ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வாழ முடிவு செய்திருக்கிறேன். மீண்டும் நடிக்க முடிவு செய்திருக்கிறேன். நல்ல வாய்ப்புக்காக காத்திருக்கிறேன்' என்கிறார் உற்சாகமாக.

## மனீஷாவின் மறுபிறவி



## எனக்கு கோயில் வேண்டாம்



தனக்கு கோயில் கட்ட விரும்புவதாக சொல்லிவந்த ரசிகர்களிடம் அப்படி எதுவும் செய்ய வேண்டாம் என்று சொல்லி விட்டாராம் நயன் தாரா. "உங்களின் அன்பும் ஆதரவும் எனக்குப் போதுமானது. இதற்கு மேல் எதையும் நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு கோயில் கட்டும் செயலில் ஈடுபடாதீர்கள். என் வேண்டுகோளையும் மீறி கோயில் கட்டினால், அது மன அமைதியைக் கெடுப்பதாக இருக்கும்" என்று அனுப்பி விட்டாராம்.

## மூன்று வேடங்களில் 'தல'!

கௌதம்மேனன் இயக்கத்தில் தயாராகி வரும் இன்னும் பெயரிடப்படாத படத்தில், அஜித் மூன்று வேடங்களில் தோன்ற இருக்கிறார்.

அஜித், அனுஷ்கா, விவேக், அருண் விஜய் உள்ளிட்ட பலர் நடித்து வரும் இந்தப் படத்தை இயக்கி வருகிறார் இயக்குநர் கௌதம்மேனன். ஆயினும் படத்துக்கு இன்னும் பெயரிடப்படவில்லை. ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்து வரும் இந்தப்படத்தை தயாரித்து வருகிறார் ஏ.எம்.ரத்னம்.

அஜித், த்ரிஷா இருவரும் கணவன், மனைவியாக நடித்து வருகிறார்கள். தற்போது ஹைதராபத்தில் அஜித், அருண்விஜய், அனுஷ்கா சம்பந்தப்பட்ட காட்சிகளைக் காட்சிப்படுத்தி வருகிறார்கள்.

படத்தில் அஜித் மூன்று வித வேடங்களில் தோன்ற இருக்கிறார். ஏற்கனவே இரண்டு வேடங்களின் புகைப்படங்கள் இணையத்தில் ஏற்கனவே வெளியாகி இருந்தன. தற்போது அஜித் தாடியுடன் வருவது போன்ற படங்கள் இணையத்தில் வெளியாகி இருக்கின்றன.

## எனக்கு ஏன் திருமணம்?

"எனக்குத் திருமணம் என்று தொடர்ந்து செய்திகள் பரவி வருகின்றன. என்னைவிட வயது அதிகமான மூத்த நடிகைகள் பலர் இன்னமும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இந்த நிலையில் நான் ஏன் அவசரமாகத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்? எனது வளர்ச்சியை பிடிக்காத சிலர் தான் இப்படி கதை பரப்புகிறார்கள்"என்று தன்னைச் சந்திப்போரிடம் புலம்புகிறாராம் அஞ்சலி.

## பூஜாவின் வருத்தம்

'முகமூடி' படத்தில் நடித்த பூஜா ஹெக்டேவை தனது அடுத்த படத்தில் நடிக்க மணிரத்னம் அழைத்துள்ளார். ஆனாலும் அவர் தற்போது 'மொகஞ்சதாரோ' என்ற ஒரு ஹிந்திப் படத்தில் நடித்துக் கொண்டிருப்பதால் மணிரத்னம் படத்தில் நடிக்க முடியாமல் போய்விட்டது. இப்படி ஒரு பொன்னான வாய்ப்புக் கிட்டாமல் போனதை நினைத்து வருத்தப்படுகிறாராம் பூஜா ஹெக்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷாலுக்கு அதிர்ஷ்டம்



'அரண்மனை' படத்துக்குப் பிறகு சுந்தர்.சி இயக்கும் படம் 'ஆம்பள'. நாயகன் விஷாலுக்கு ரம்யா கிருஷ்ணன், கிரண், ஐஸ்வர்யா என்று மூன்று அத்தைகள். அத்தைகளுக்கு ஒரு மகள். தங்கள் மகளையே விஷாலுக்கு திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று மூன்று அத்தைகளும் போட்டி போடுகிற மாதிரியான கதையில் ரம்யா கிருஷ்ணன் மகளாக ஹன்சிகாவும், மற்ற இருவரின் மகள்களாக தெலுங்கு நடிகைகள் மதுரிமா மற்றும் மாதவி லதாவும் நடித்திருக்கிறார்கள்.

# மூக்கு மேல் கோபம்




சமந்தா தன் மூக்கை சத்திர சிகிச்சை மூலம் அழகாக்க போகிறார் என்ற செய்தி கடந்த வாரம் சினிமா உலகில் தீயாகப் பரவியது. இதைக் கேட்டு அதிர்ந்து விட்டாரம் சமந்தா.

"என் மூக்கு அளவாக, அம்சமாக இருக்கிறது. அதை ஏன் நான் அறுவை சிகிச்சை செய்து அழகாக்க வேண்டும்? என்னைப்பற்றி அடுத்தடுத்து வரும் வதந்திகளில் இதுவும் ஒன்று" என்கிறார் சமந்தா.

# சின்ன இசைப் புயல்



இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் தனது மகனையும் இசைத்துறையில் இறக்க முடிவு செய்து விட்டார். அதுவும் தன்னை அறிமுகம் செய்த மணிரத்தினத்தின் படத்தில் தான் தன் மகனையும் அறிமுகப்படுத்த உள்ளார். மணிரத்னம் இயக்க உள்ள படத்தில் பாடல் ஒன்றைப் பாடி தமிழில் அறிமுகம் ஆகவுள்ளார் சின்ன இசைபீபுயல் அமீன்.



"என் தங்கை அக்ஷ்ராவுக்கு நான் அறிவுரை செய்ய தேவையில்லை" என்று நடிகை ஸ்ருதிஹாசன் பத்திரிகையாளர் சந்திப்பீல் கூறினார்.

ஹரி இயக்கத்தில் விஷால், ஸ்ருதிஹாசன் நடித்திருக்கும் 'பூஜை' திரைப்படம் தீபாவளி அன்று திரைக்கு வரவிருக்கிறது.

'பூஜை' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பில் ஸ்ருதிஹாசன் பேசும்போது, '

"தெலுங்கு,ஹிந்தி படங்களிலும் நடிப்பதால் தமிழில் அதிக படங்களில் நடிக்க முடியவில்லை.

3 மொழிகளிலும் நடிப்பதால் மும்பையில் தனியாக வசிக்கிறேன். மணிரத்னம் படத்தில் கூட நேரப் பிரச்சினையால் நடிக்க முடியாமல் போய்விட்டது.

என் தங்கை அக்ஷ்ரா, 'ஷமிதாப்' என்ற ஹிந்திப் படத்தில் நாயகியாக அறிமுகமாகியுள்ளார். அவள் திறமைசாலி. அவளுக்கு நான் அறிவுரை செய்ய வேண்டியதில்லை.

அடுத்து தமிழில் சிம்புதேவன் - விஜய் இணையும் படத்தில் நடிக்கிறேன்" என்று கூறினார்.

# அக்ஷ்ராவுக்கு அறிவுரையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பேறிகளுக்கு ஒரு பாடம்

சிறுவர் கதை

பகுதி -03

(கடந்தவார தொடர்ச்சி)



அதற்கு வழிப்போக்கர் சொன்னார், "ஆகா! ஆகா! என்ன ஒரு தாய்ப்பாசம்"

அப்போது ஊர்க்காரர் கேட்டார்,

"இந்த கட்டுக்கதையை நீங்கள் நம்புகிறீர்களா?"

வழிப்போக்கர், "நம்பாமலா? என்ன ஒரு தாய்ப்பாசம்" என்றார்.

மூன்றாவது சோம்பேறி கதை சொல்லத் தொடங்கினான்.

"ஒரு நாள் நான் காட்டுக்கு முயல் வேட்டைக்குப் போனேன். காடெல்லாம் அலைந்தும் ஒரு முயல்கூடக் கிடைக்கவில்லை. ஒரு புதரின் பின்னால் மறைந்து முயலுக்காகக் காத்திருந்தேன். அப்போது என் பின்புறமிருந்து ஒரு கர்ஜனை கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு சிங்கம். 'அட ச்சீ!போ!நான் முயலுக்காகக் காத்திருக்கிறேன்' என்றேன். சிங்கத்துக்குக் கோபம் வந்துவிட்டது. அது கடித்து என் தலையை விழுங்கிவிட்டது.

எனக்கோ அதைவிடக் மிகவும் கோபம். கத்தியை எடுத்தேன். சிங்கத்தின் வயிற்றைக் கிழித்தேன். என் தலையை வெளியே எடுத்து கழுத்தில் மாட்டிக்கொண்டேன்" என்றான் மூன்றாவது சோம்பேறி.

"அப்புறம் . .?" வாய்பிளந்து கேட்டார் வழிப்போக்கர்.

"அப்புறமென்ன ? ஒரு முயலை வேட்டையாடி வீட்டுக்குக் கொண்டுவந்தேன்" என்று பெருமை பொங்கச் சொன்னான் சோம்பேறி.

வழிப்போக்கர் சொன்னார், "என்ன வீரம்! என்ன வீரம்!"

ஊர்க்காரர் கேட்டார், "இதையும் நீங்கள் நம்புகிறீர்களா?"

வழிப்போக்கர் சொன்னார்,

"ஆமாம்"

கடைசியாக வழிப்போக்கர் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார்,

"ஒரு நாள் நான் பக்கத்து ஊர்ச் சந்தைக்குப் போனேன். போகிற வழியில் ஒரு மனிதர் அடிபட்டுக் கிடப்பதைப் பார்த்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர் உயிரைக் காப்பாற்றினேன். அவர் ஒரு மந்திரவாதி. அவர் போகும்போது எனக்கு மூன்று அவரை விதைகளைத் தந்து விட்டுப் போனார். நான் அந்த விதைகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றி வைத்தேன். மறுநாள் காலையில் பார்த்தால் அவை முழுச் செடிகளாக வளர்ந்திருந்தன. மதியம் பார்த்தால் மூன்று பூக்கள் பூத்திருந்தன.

மாலையில் அவை தரையில் உதிர்ந்து மூன்று மனிதர்களாக மாறிவிட்டன. அவர்கள் என்னிடம் வந்து "நாங்கள் உங்களுடைய அடிமைகள்"என்றனர்.

அன்று முதல் அவர்கள் மூவரும் என்னிடம் அடிமைகளாக வேலை செய்து வந்தனர். ஆனால் அவர்கள் மூவரும் படு சோம்பேறிகள். ஒரு நாள் அவர்கள் மூவரும் ஊரைவிட்டு ஓடிவிட்டார்கள். அவர்களைத் தேடித்தான் நான் இந்த ஊருக்கு வந்தேன். நீங்கள்தான் அந்தச் சோம்பேறிகள்" என்று கதையை முடித்தார்.

ஊர்க்காரர் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

சோம்பேறிகள் கதையை நம்பாவிட்டால் முதலில் போட்ட ஒப்பந்தப்படி மூவரும் வழிப்போக்கருக்கு அடிமைகள். நம்பினாலும் கதைப்படி மூவரும் வழிப்போக்கனுக்கு அடிமைகள். என்ன செய்வார்கள் அந்தச் சோம்பேறிகள்? கடைசியாக தங்களுடைய தவறை உணர்ந்து வழிப்போக்கரிடம் மன்னிப்புக் கேட்டார்கள் சோம்பேறிகள்.

(முற்றும்)

## தொந்தி மாமா

தொந்தி மாமா வந்தாராம்
தொப்பியைக் கழற்றிப் போட்டா ராம்
சாக்குப் பையை எடுத்தாராம்
சந்தைக்கடைக்குப் போனாராம்
சறுக்கி கீழே விழுந்தாரம்
பார்த்தோரெல்லாம் சிரித்தாராம்
சீனி முட்டாய் வாங்கினாரம்
சிரித்தோர்க்கெல்லாம் கொடுத்தாரம்

கபிலன், கம்பர்மலை




## ஏன் புகை?

ஒரு பெரிய ஐஸ் கட்டியைக் காற்றில் திறந்து வைத்தால் அதிலிருந்து வெண்ணிறமான புகை [FUMES] கிளம்புகிறது அல்லவா? ஏன்? இது ஏதேனும் வாயுவா?

ஐஸ் கட்டியிலிருந்து எந்த வாயுவும் வெளியேறுவதில்லை. ஐஸ் கட்டியை திறந்து வைக்கும்போது ஐஸைச் சுற்றியுள்ள காற்று குளிர்வடைகிறது. ஒரு அளவிற்கு மேல் குளிர்வடையும்போது அந்தக் காற்றிலுள்ள ஈரப்பதம் (MOISTURE) மிக நுண்ணிய நீர்த்திவலைகளாக மாறுகிறது. அறையிலுள்ள காற்று மேலும் கீழுமாக நகரும்போது (CONVECTION CURRENTS), இந்த நீர்த்திவலைகளும் நகருவதால் புகை போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

## கண்டுபிடியுங்கள்








ஆசிரியர்:- எதுக்கடா வகுப்புக்கு கழுதையை கொண்டு வந்தாய்?

மாணவன்:-உங்களுக்கெல்லாம் பாடம் நடத்துறதை விட ஒரு கழுதைக்குப் பாடம் நடத்தலாம் என்று நேற்று சொன்னீங்களே சேர் அது தான்?!



மழலைகளே...! வர்ணங்களால் மெரு கூட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் ஊற்று -17



## அழியாச் செல்வம்

அன்புச் செல்வமே
உண்ண உணவு இல்லாவிடினும்,
உடுக்க உடை இல்லாவிடினும்,
இருக்க இடம் இல்லாவிடினும்,
வறுமை உங்களை வாட்டி விடினும்,
போர்ச் சூழல் உங்கள் உடைமைகளை
கொள்ளை கொண்டு விடினும்
சோர்ந்து போகாமல்
எவராலும் கொள்ளையிட முடியாத
கல்விச் செல்வத்தை கற்றுக் கொள்ள
ஆயத்தமாகு, அக்காவிடம் கேட்டு.

திருமதி.ஜெபறூபி ஜெயரூபன்
அரியாலை.

## நிலா



இன்று வந்தது
நாளையும் வரும்

ஆனால் நேற்று வராது
மூடிக்கொண்ட கதவு அது

திறந்து பார்க்க சாவியும்
இல்லை

சேர்த்து வைக்க வழியும்
இல்லை

துரத்திப் பிடிக்க ஓடுவோம்
எங்கே தான் போய் விடும்

நாம் இவ்வுலகை விட்டுப்
போகும் முன்னர்
இந்த நேரத்தைத்
துரத்திப் பிடிக்கலாம்

நேரத்தின் பின்னால்
ஓடிப்போவோம் வாருங்கள்

வேகமாக ஓடுவோம்,
விரைவாக ஓடு

வரதன்,
மாங்குளம்

# கவிதைப்புனல்

## பயணம்

மனிதன் கடவுளைப் பிரித்தான்
மதத்தினை விதைத்தான்
மனிதத்தை தொலைத்தான்
தொலைத்ததை தேடுகிறான்!
மதிகெட்ட மானிடனே!
மனிதனை நேசித்து
மதத்தினை பூசித்து
பயணத்தை தொடரு
பாதைகள் வேறானாலும்
பயணம் ஒன்றே!

## காதல்

காதல்
ஒருத்தியை
ரணமாக்கியது!!
சாதி
ஒருவனை
பிணமாக்கியது!!

கல்லறை கூட
இவர்களை
பிரித்தது
ரத்தத்தில் ஜாதி
பார்க்காத மனிதன்
காதலில் மட்டும்
பார்ப்பது ஏனோ?

பேரின்பநாயகம்,
திருகோணமலை.



## வாலிப வேதனை

வாலிப வயதில்
வேதனை வருகுது
வதங்கிய வெளியினில்
வாழ்வது வேகுது

தம் முலை திருடியே
தலைமுறை தவிக்குது
தெருவிலே திரிந்துமே
தம் தலை தூங்குது

கருவிலே காயங்கள்
கொழுத்தியே கிடக்குது
கூரிய கருவிகள்
கழுத்திலே கிடைக்குது

சாதனைகள் சரியவே
சோதனை சேருது
சரித்திரம் சிதையவே
சாத்திரம் சேருது

காலங்கள் கூடவே
கோலங்கள் கரையுது
கேவலங்கள் கண்டுமே
ஞாலமே அழுகுது

வே.முல்லைத்தீபன்,
ஒட்டிசுட்டான்

## கனவு சரிந்த நினைவுகள்

காரிகையை நினைந்துருகி
கனவுகள் கண்டிருந்தேன்
பொழுதுகள் புலர்ந்திட
சரிவுகள் தொட்டதுவே

வாய்க்கால் இன்னும்
விட்டுப் போகலடி
மனக்காய்ச்சல் தந்தவளால்
மயங்கித் தினம் உழல்கிறேன்

தேவதாஸின் கதை படிச்சேன்
சிரிப்புத்தான் வந்ததடி-எனை
நீ தேவதாஸாக மாற்றிய பின்
அவன் உள்ளம் புரிந்ததடி

உனைப் பார்த்த நேரம்
மனமகிழ்ச்சி அதிகரிப்பு
உனை பிரிந்த பின்பு
மனக்குழப்பம் அதிகரிப்பு

அல்லல்பட்டு உன் நினைவால்
நான் நாளை அழிந்து போனாலும்
பிடிவாதக் குணம் உனக்கு
பெருமிதமாக உள்ளதால்-என்
இறுதிக்கிரியைக்கும்
நீ வரமாட்டாய்

வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் கணக்குப் பலிக்கும்?

- கோகுலன்

ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்ற சொலவடை தற்போது ஜெயலலிதாவின் சொத்துகுவிப்பு வழக்கில் உண்மையாகிவிட்டது. ஜெயலலிதா கைது விவகாரத்தால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை பயன்படுத்தி தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரலாம் என்ற நோக்கிலும், அடுத்து தமிழகத்தில் இடம்பெறவுள்ள சட்டமன்றத்தேர்தலில் யாரைக்கூட்டணி சேர்ப்பது, யாரைக்களமிறக்குவது என மாநில கட்சிகள் மட்டுமின்றி தேசியக் கட்சிகளும் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளன. ஆனால் இதற்கு அ.தி.மு.க. கட்சி தொண்டர்களால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு முக்கிய கட்சிகளான தி.மு.க.வுக்கோ பா.ஜ.க.வுக்கோ சாதகமாக அமைந்துவிடப்போவதில்லை. இதை நன்கு அறிந்து கொண்ட மத்தியில் ஆட்சி அமைத்துள்ள மோடி தலைமையிலான பா.ஜ.க. மீண்டும் நடிகர் ரஜினிகாந்தை அரசியலுக்கு வருமாறு நாடியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு முன்னர் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பா. ஜ.க. தலைவர் நரேந்திர மோடி ரஜினியின் வீட்டுக்கு நேரில் சென்று சந்தித்திருந்தார். இதையடுத்து பாரதிய ஜனதாக் கட்சியில் ரஜினி இணைவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு தமிழக பா. ஜ.க. தலைவர்களும் அழைப்பு விடுத்திருந்தனர். ஆனால் ரஜினி எதுவும் கூறாது வழமை போல அமைதி காத்தார்.


ஆனால் தற்போதைக்கு தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரக்கூடிய சக்திவாய்ந்த தலைவராக ரஜினியைக் கருதியுள்ள மோடி அரசு, மீண்டும் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர்களில் ஒருவரான தமிழிசை சௌந்தரராஜனை தூது அனுப்பியுள்ளது. இதற்கு ரஜினியிடம் இருந்து எந்தவிதமான பதிலும் வெளியாகாத போதிலும் மோடி குறித்து ரஜினிகாந் சாதகமான கருத்துக்களையே கொண்டுள்ளதாக தமிழிசை சௌந்தர்ராஜன் கருத்து



வெளியிட்டுள்ளார். இதன் மூலம் ரஜினி பா.ஜ.க பக்கம் வரலாம் என்று அவர் சமிக்ஞை காட்டியுள்ளார்.

மறு பக்கத்தில் தி.மு.க. வினரும் சத்தமில்லாமல்பா.ஜ.க.வை நெருங்க முயற்சி செய்துவருகின்றனர். மத்தியில் பா.ஜ.க ஆட்சி அமைத்த பிறகு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மோடியை தி.மு.க தலைவர் கருணாநிதி பாராட்டி வருகிறார். ஒன்றரை மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு கூட்டத்தில் பேசிய கருணாநிதி, இந்தியப் பிரதமர்களிலேயே ஆற்றல் மிக்கவர் மோடி என்று புகழ்ந்து தள்ளியுள்ளார். சில வாரங்களுக்கு முன்னர் சென்னை வந்த மத்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதாவை சந்தித்துப் பேசியிருந்தார். இப்படி ஜெயலலிதாவை அவர் சந்தித்தமை மோடியின் புகழுக்கு இழுக்கு என்றும் தி.மு.க கூறிவருகிறது. பா.ஜ.க.வை தி.மு.க நெருங்க முயற்சிப்பதற்கு பல்வேறு அரசியல், குடும்பக் காரணங்கள் இருக்கின்றன. ஆயினும் இப்போது தி.மு.கவை அரவணைப்பதால் தங்களுக்கு என்ன பலன் கிடைக்கப்போகிறது என்ற யோசனையில் பிடிகொடுக்காமல் இருக்கிறது இவையெல்லாம் ஒருகரையில் நடைபெற மறு முனையில் தமிழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியை கலைக்க தீவிர அக்கறை காட்டிவருகின்றது பா.ஜ.க அரசு. இதற்கு அரசியல் கோமாளி என்று அழைக்கப்படும் சுப்ரமணியம்சுவாமியை பகடைக்காயாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார் மோடி.

குழப்பம் செய்வதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டு செயற்பட்டு வரும் சுப்ரமணிய சுவாமி அவ்வப்போது தனது வலைத்தளங்களில் ஜெயலலிதாவைக் கேலி செய்து எழுதி வருகின்றார். இதன் மூலம் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆதரவாளர்களை சீண்டிவிட்டு, அமைதியின்மையை தோற்றுவித்தால் சட்டம் ஒழுங்கு சீர் குலையும். பின்னர் இதைக் காரணம் காட்டி, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும் என்று கூறி ஆட்சியைக் கலைப்பதே இந்திய மத்திய அரசின் நோக்கமாக இருக்க வேண்டும்.



இதையே அண்மையில் இடம்பெற்ற ஜெயலலிதாவின் பிணைமனு நிராகரிக்கப்பட்டமையும், சாமியின் சமூக வலைத்தள பதிவும் எடுத்துக் காட்டுகின்றது. பிணை மனு நிராகரிக்கப்பட்டது குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. இது நான் எதிர்பார்த்தது தான். அது போலவே, பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிராகரிப்பு தொடர்பில் நான் காலையில் எனது டுவிட்டர் வலைதளத்திலும் கூடப் பதிவு செய்திருந்தேன். நான் கணித்தது போலவே, ஜெயலலிதாவின் ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

சுவாமியின் இந்தக் கருத்தின் மூலம் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கக்கூடாது என மோடி தலைமையிலான பா.ஜ.க முடிவு செய்து இதற்குப் பகடைக்காயாக சுவாமியை பயன்படுத்தி கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதிக்கு முற்கூட்டியே ஆலோசனை வழங்கியிருக்கலாம் அதனால்தான் அரசதரப்பு வழக்கறிஞர் எதிர்ப்பு தெரிவிக்காத ஜெயலலிதாவின் பிணை வழங்கும் மனு மீதான விசாரணை நீதியாக நடைபெறவில்லை என்று பரவலாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. அரச தரப்பு சட்டத்தரணி நிபந்தனையுடனான பிணைக்கு மறுப்புத் தெரிவிக்காத போதும் நீதிபதி பிணை வழங்க வில்லை. அத்துடன் தீர்ப்பு இப்படித்தான் வரப்போகின்றது என்பதை காலையிலேயே தனது டுவிட்டர் பக்கத்தில் சொல்லிவிட்டார் சுப்ரமணிய சுவாமி. எனவே இந்த வழக்கில் உண்மையாகவே அரசியல் புகுந்து விளையாடுகிறதோ என்ற எண்ணம் தமிழக மக்களுக்கு ஏற்படத் தொடங்கி விட்டது.

ஏனெனில் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்முனைகளில் நின்று போட்டியிட்டாலும் ஜெயலலிதா என் நண்பர் என்று பகிரங்கமாக மேடைகளில் முழங்கியவர் மோடி. இன்று அதே மோடிதான் சிறையில் இருப்பவர்களின் ஆதரவு எங்கள் அரசுக்குத் தேவையில்லை என்று ஜெயலலிதாவுக்கு எதிரான வார்த்தைகளை பொதுவெளியில் சொல்லிவருகின்றார். இதன் மூலம் ஜெயலலிதாவுடன் நேரடியாக மோதி, ஆட்சி மாற்றத்தை தமிழகத்தில் உண்டாக்க மோடி துணிந்துவிட்டார் என்று கருதப்படுகின்றது. ஆனால் அம்மா என்றால் சும்மா இல்லை. மோடி அலைக்கெல்லாம் அம்மா அழிந்துபோகும் ஆள் இல்லை. அவர் விரைவில் வெளியே வருவார். அப்போது அவரின் ருத்ரதாண்டவத்தில் சதிகாரர் எல்லோருமே அழியப்போகிறார்கள் என்று நம்பிக்கையோடு சொல்கிறார்கள் அ.தி.மு.க விசுவாசிகள். பார்ப்போம். யார் கணக்குப் பலிக்கிறதென்று.

**தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரக்கூடிய சக்திவாய்ந்த தலைவராக ரஜினியைக் கருதியுள்ள மோடி அரசு, மீண்டும் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர்களில் ஒருவரான தமிழிசை சௌந்தரராஜனை தூது அனுப்பியுள்ளது. இதற்கு ரஜினியிடம் இருந்து எந்தவிதமான பதிலும் வெளியாகாத போதிலும் மோடி குறித்து ரஜினிகாந் சாதகமான கருத்துக் களையே கொண்டுள்ளதாக தமிழிசை சௌந்தர்ராஜன் கருத்து வெளியிட்டுள்ளார். இதன் மூலம் ரஜினி பா.ஜ.க பக்கம் வரலாம் என்று அவர் சமிக்ஞை காட்டியுள்ளார்.**

**மத்தியில் பா.ஜ.க ஆட்சி அமைந்த பிறகு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மோடியை தி.மு.க தலைவர் கருணாநிதி பாராட்டி வருகிறார். ஒன்றரை மாதங் களுக்கு முன்பு நடந்த ஒரு கூட்டத்தில் பேசிய கருணா நிதி, இந்தியப் பிரதமர்களிலேயே ஆற்றல் மிக்கவர் மோடி என்று புகழ்ந்து தள்ளியுள்ளார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டில் -22

# இரைதேடும் இணைய வலை

■ சுடுதண்ணி

அது போன்ற கால கட்டங்களில் எந்த ஒரு மனிதனும் தங்கள் நம்பிக்கைக்குரிய நபர்கள்/ நண்பர்கள் மத்தியில் மட்டுமே தங்களைஅடையாளப்படுத்திக் கொள்வார்கள். உதாரணத்துக்கு நீங்கள் விடுதலைப்புலிகளின் பாடலை இணையத்தில் பார்த்துவிட்டு , அரசாங்கம் நடத்தும் நிகழ்ச்சிக்குச் சென்றால் உள் நுழைந்ததும் எச்சரிக்கை ஒலி அடிக்கச் செய்யுமளவுக்கு வளரப் போகும் விஷயம் தான் இந்த இணையக் கண்காணிப்பு .

இவற்றையெல்லாம் அமெரிக்க அரசு செய்கிறது என்று உலகுக்கு மறுக்க முடியாத ஆதாரங்களுடன் வெளியிட்டு இதன் ஆபத்தினை பற்றி எடுத்துரைத்த எட்வர்ட் ஸ்நோடனை அமெரிக்க அரசாங்கத்துடன் வெள்ளைக் காக்கை மேய்க்கும் பெரும் ஊடகங்கள் உளவாளி, மோசடிக்காரன் என்று ஆர்ப்பரித்து அடங்கின.



எல்லாம் சரி இதன் மூலம் அனானிமஸ் அன்பர்களுக்கு வந்த பிரச்சினைகள் என்ன, அவர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள், மேலும் மைக்ரொசொப்ட், கூகுள் போன்ற நிறுவனங்கள் பிரத்தியேகமாகப் பயன்படுத்தும் குறியீட்டு முறையை (encrpytion) எப்படி அமெரிக்க அரசாங்கள் கட்டுடைத்து அனைத்துத் தகவல்களையும் பார்க்கும் பலம் பெற்றன?

முள்ளிவாய்க்கால் முற்றத்தின் சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டதைக் கேள்விப்பட்ட தி.மு.க.வினரைப்போல் வாயெல்லாம் பல்லாக மனமகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருந்த அனானிமஸ் குழுவினர் மற்றும் இணையத்தில் தங்கள் அடையாளங்களை மறைத்து வாழும் சாமானியர்களின் வாழ்க்கையிலும், வாயிலும் மண்ணை அள்ளிப் போட்டது அமெரிக்க அரசு.

இணையத்தில் குறியீட்டு முறைப்படி தகவல் பரிமாற்றம் செய்தாலும் அவற்றைச் சேமித்து அதன் குறியீட்டு முறையினைக் கட்டுடைத்துத் தகவல்களைப் படிப்பதை குற்றமற்ற ஒன்றாக மாற்றும் வண்ணம் சட்டங்கள் வளைக்கப்பட்டன. குறியீட்டுமுறையின் வீரியம் அதிகமாக இருந்தால் சம்பந்தப்பட்ட மைக்ரோசொப்ட், கூகுள் போன்ற நிறுவனங்களின் உதவியை நாடுவது, ஒரு குறிப்பிட்ட பயனாளர் கணக்கின் கடந்தகால பதிவுகள் அனைத்தையும் அந்தநிறுவனங்களின் மூலம் பெறுவதற்கான அதிகாரங்களையும் அமெரிக்க பாதுகாப்புத் துறை கைவரப்பெற்றது.

இது போன்ற வேண்டுகோள்களுக்கெல்லாம் நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பணிந்து போக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டன. இதனால் மானமே பெரிதென்று மீசை மடங்காத, விறைப்பான நிறுவனங்கள் தங்கள் தொழிலையே இழுத்து மூடிய சம்பவங்களும் நடந்தன. இது கிட்டத்தட்ட நூறு வீடுகள் இருக்கும் ஊரில், ஒரு திருடனின் வீட்டைக் கண்டுபிடிப்பதற்காக அத்தனை வீட்டினையும் முன் அனுமதியின்றி, யாருக்கும் தெரியாமல் உட்புகுந்து வேவு பார்க்கலாம் என்பது போன்ற ஒரே நேரத்தில் பகீர் மற்றும் கிளுகிளுப்பு இரண்டும் கலந்த ஒரு விஷயம்.

அது மட்டுமின்றி அமெரிக்க உளவு அமைப்புகள் அனானிமஸ் ஆதரவாளர்கள்/ ஆர்வலர்கள் போர்வையில் அவர்களின் செயற்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்ளவும், இணையத்தில் தங்கள் அடையாளத்தினை மறைத்துக் கொள்ள விரும்புவர்கள் பெரும்பான்மையாகப் பயன்படுத்தும் TOR வலையமைப்பிலும் பங்கேற்பாளர்களாக உருமாறி தங்கள் கணினிகள் மூலம் பயணிக்கும் தகவல்களைக் கண்காணிக்கவும் ஆரம்பித்தார்கள். இந்தக் காலகட்டத்துக்குப் பிறகு கணினி/இணைய வல்லுநர்கள் மத்தியில் பலத் துயரச் சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன.

அந்தச்சம்பவங்கள் அனைத்தும் அனானிமஸ் தொடர்பானவை என்பதற்கான நேரடி ஆதாரங்கள் ஏதும் பொதுவில் வைக்கப்படவில்லை. என்றாலும், அவற்றின் மூலம் அனானிமஸ் அல்லது அமெரிக்க அரசுக்கு எதிராக இணையத்தில் அடையாளங்களை மறைப்பவர்கள் மற்றும் ஊடகங்களின் தணிக்கை முறை ஆகியவற்றுக்கெதிராக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடையவர்கள்தான் என்று பெரிதும் நம்பப்படுகிறது.

அமெரிக்க அரசு இத்தனை பிரயத்தனப்பட்டாலும் அவர்களுக்கு கைகொடுத்ததென்னவோ எதிரிகளைக் கவிழ்க்கப் பயன்படும் தொன்றுதொட்ட பாரம்பரிய வழக்கமான காட்டிக்கொடுக்க உள்ளிருக்கும் ஆள்களை வளைக்கும் தந்திரம் தான். இணையத்தில் மாயமான்களாக வலம்வரும் அனானிமஸ் அன்பர்களை அவ்வாறு வளைத்த வரலாறு அதிரிபுதிரி திருப்பங்கள் நிறைந்த மசாலாத் திரைப்படங்களை மிஞ்சிய ஒன்று. அந்தக்கதையினைப் பார்ப்போம்.

முதலில் சட்டமாற்றங்கள் மூலம் இணையக்குற்றங்கள் மிகப்பெரும் தேசத்துரோக வழக்குகளைப் போலவே கையாளப்பட்டன. சிறு குற்றங்களுக்குக் கூட பல்லாண்டு சிறைத்தண்டனை, கட்டவே முடியாத அபராதத் தொகை போன்ற அஸ்திரங்கள் ஏவப்பட்டன. அனானிமஸ் அன்பர்கள் முகமூடி மாயாஜாலக்காரர்களாக இருந்தாலும் பெரும்பான்மையானோர் மிக இளம் வயதினராகவோ, அதி முக்கிய இணையப் பாதுகாப்புத் துறைகளின் பதவிகளை அலங்கரித்தவர்களாகவோ அல்லது அதனை எதிர்நோக்கியவர்களாக இருந்தனர்.

அமெரிக்க அரசின் கடும் தண்டனைகளும், வழக்கில் சிக்கி விட்டால் தங்கள் எதிர்காலம் சாகும்வரை சின்னாபின்னப்படுத்தப்படும் என்பதும் அவர்களிடையே ஒரு மனக்கலக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. இதில் நாம் முதலில் சந்திக்கப் போகும் நபர் சிக்கி என்று செல்லமாக அழைக்கப்படும் 20 வயதாகும் சிகர்துர் தொர்டர்சன். விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேயின் சகாக்களில் ஒருவன் தான் இந்த 20 வயது சிகர்துர்.

இந்தப் பொடிப்பயல் எப்படி ஜூலியனுடன் இணைந்தான் என்று உங்கள் மனதில் தோன்றும் அதே கேள்வியும் ஆச்சரியமும் அனைவருக்கும் தோன்றியது. ஜூலியனுடனிருந்தவர்கள் அனைவருமே அவன் சின்னஞ்சிறுசு, அறியாத வயசு எனவே அவதானம் தேவை என்று ஜூலியனைக் கடுமையாக எச்சரித்தனர். விதி வீதியில் விளையாடியது, ஜூலியன் கேட்கவில்லை.

ஜூலியன் சிகர்துர் மேல் வைத்த நம்பிக்கைக்குக் காரணம் இருந்தது. ஐஸ்லாந்தைச் சேர்ந்த சிகர்துர், ஜூலியனைப் போலவே தனிமை நிறைந்த சிறுவனாக வளர்ந்ததும், தன் 12 வயதிலேயே கணினிகள் மேல் காதல் கொண்டு ஒரு இணையத்தளத்தினை ஹக்செய்ததும், 14 வயதில் குடும்பத்துடன் விமானப்பயணம் மேற்கொள்கையில், ஐஸ்லாந்தின் முக்கிய நிதி நிறுவனமான மைல்ஸ்டோன்னின் முக்கியஸ்தரான தன் சக பயணியின் மடிக்கணினியினை சரி செய்து கொடுத்ததன் மூலம் அந்த நிறுவனத்திலேயே வேலை கிடைக்கப்பெற்றதும் சிகர்துரின் திறமையைச் சொல்லும். சிகர்துரின் வீரியம் புரியாமல் மைல்ஸ்டோன் நிறுவனம் கொடுத்த வேலை அவர்களின் வலையமைப்பில் சிதறிக்கிடக்கும் அதிமுக்கிய ஆவணங்களைத் தேடிப்பிடித்து அவற்றை முற்றாக அழிப்பது.

(வலை விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

15.10.2014 –21.10.2014

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**மேஷம்** குடும்பத்தில் மங்கலநிகழ்வு உண்டாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பெண்களால் உதவி உண்டு. புத்திரர் சிறு விஷயங் களுக்காக ஆர்வம், கோப குணங்களுக்கு ஆட்படுவர். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். இல்லறத்துணையின் கருத்துகளை மனமுவந்து ஏற்பீர்கள். தொழிலில் அபிவிருத்தி பணிபுரிய தகுந்த வாய்ப்பும் வரும். பணியாளர் கடமை உணர்ந்து பணி இலக்கைப் பூர்த்தி செய்வர். பெண்கள், குடும்ப நலன் சிறக்க சில மாற்றுத்திட்டம் உருவாக்குவர். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால் படிப்பில் அக்கறை வளரும்.

### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**ரிஷபம்** திட்டமிடுகிற பணியில் குறுக்கீடு அணுகாத சுமுக சூழ்நிலை இருக்கும். மனஉறுதியுடன் செயல்பட்டு அதிக நன்மை பெறுவீர்கள். நண்பரின் கஷ்டம் நிவர்த்தியாக தேவையான உதவி வழங்குவீர்கள். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து நல்வழி நடத்துவது நலம் பெற உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்புப் பெற்று திருப்திகர சன்மானம் பெறுவர்.

### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**மிதுனம்** முயற்சி நிறைவேற சமயோசிதமாக செயற்படுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் பலமும் துணை நின்று உதவும். இளைய சகோதரர், உங்களின் ஆலோசனையை பெரிதும் விரும்புவர். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகி மகிழ்ச்சி பெருகும். நிதானித்துப் பழகுவது நல்லது. தொழில் வியாபாரம் நடைமுறை சிறக்க அதிக மூலதனம் தேவைப்படும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும்.

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**கடகம்** வாழ்வின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்ற உதவுகிற திட்டங்களைப் பற்றிச்சிந்திப்பீர்கள். இளைய சகோதரரின் உதவி பலமாகக் கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்புப் பணி தேவைப்படும். எதிரியிடம் விலகுவதால் சிரமம் அணுகாமல் இல்ல றத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். உத்தியோகத்தர் திட்ட இலக்கை அடையப் பணியாளர்களுக்கு ஊக்கமும் உதவியும் தருவர்.

### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**சிம்மம்** பணிகள் எளிதாக நிறைவேறி, மனதில் புத்துணர்வு, பெருமிதம் உருவாக்கும். அறிமுகம் இல்லாதவர்க்கு வீடு, வாகனத்தில் இடம் தரவேண்டாம். மின்சார உபகரணங்களை கவனமுடன் பயன்படுத்த வேண்டும். பெண்கள் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்வர். மாணவர்கள் அதிக விலையுள்ள பொருள் நண்பரிடம் இரவல் வாங்க வேண்டாம்.

### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**கன்னி** கடந்த நாள்களில் உங்களின் செயல்நிறைவேற தடையாக இருந்தவர் மற்றும் சூழ்நிலையை எண்ணுவீர்கள். சத்தியமும், தர்மமும் நல்வழியைத் தரும் என்று நம்பிக்கை[illegible]ன் பணிமேற்கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக அமைந்திட அதிக உழைப்பு உதவும். மாணவர்கள் ஆசிரியரின் நல்வழிகாட்டுதல் முழு மனதுடன் ஏற்பது நன்மை தரும்.

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**துலாம்** ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பதால் மட்டுமே பணக்கடன் பெறுகிற சூழ்நிலை மாறும். உங்கள் சொல்லுக்கு வரவேற்பு தருபவர்களிடம் மட்டும் பேசுவது நல்லது. அளவான உழைப்பு, சீரான ஓய்வு, உடல் நலம் பாதுகாக்கும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் அவசியம்.இல்லறத்துணையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும்.

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**விருச்சிகம்** சமூக நிகழ்வுகளை தெளிந்த மனதுடன் அணுகுவீர்கள். உங்கள் மீதான மற்றவரின் பார்வை மதிப்பு மிகுந்ததாக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பெண்கள், பிள்ளைகளின் நலனில் கூடுதல் கவனம் கொள்வர். மாணவர்கள், புதிய பயிற்சியினால் தேர்ச்சி விகிதம் சீராக்குவர்.

### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**தனுசு** பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தின் தேவை பூர்த்தியாகும். சிலர், புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரரின் உடல்நலம் சீராக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். எதிரி உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் கொள்வர். இல்லறத்துணை தன் கடமை உணர்ந்து பணிகளில் ஈடுபடுவார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியை சரி செய்து பணவரவும், புகழும் பெறுவீர்கள்.

### உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்

**மகரம்** இடம், சூழ்நிலை உணர்ந்து பேசி நற்பெயரைப் பாதுகாத்திடுவீர்கள். குடும்பத்தினரின் தேவை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். நிர்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை, உங்களின் அருமை பெருமை மிகுந்த நற்குணம் பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடி நண்பரின் உதவியால் நிவர்த்தியாகும். பணியாளர், சக பணியாளர்களிடம் சுமுக நட்பு பாராட்டுவர்.

### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**கும்பம்** சமூக நிகழ்வின் போக்கு இப்படித் தான் இருக்கும் என, கணிக்கும் திறன் வளரும். வீடு, வாகனத்தில் அபிவிருத்திப் பணி மேற்கொள்வீர்கள். புத்திரரின் வாழ்வியல் முறை பிறர் மெச்சத்தகும் அளவில் உருவாகும். எதிரியை மன்னிக்கும் மனப்பாங்கு பெறுவீர்கள். பணியாளர்கள், பதவி உயர்வு சலுகை பெற அனுகூ[illegible] உண்டு. பெண்கள், கணவரின் கௌரவம் அதிகரிக்க உதவும் வகையில் செயல்படுவர். மாணவர்கள், படிப்பில் சிறந்து ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டு பெறுவர்.

### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**மீனம்** பிறரது பகட்டு நிறைந்த வாழ்வு மு[illegible]றையை பின்பற்ற மனம் விரும்பும். உடன் பிறந்தவர் உறுதுணையாக செயல்படுவர். வீட்டிற்கு வரும [illegible]விருந்தினரை அவசர பணிகளை காரணம் சொல்லி, உபசரிப்பில் குறை வைக்க வேண்டாம். புத்திரர் படிப்ப[illegible]ல் சிறந்து கவிதை சொல்லும் [illegible]க்க உணவுப் அளவில் ரசனையுடன் பேசுவார். உஷ்ணம் தொடர்பான பிணி அணு[illegible] பழக்கத்தில் மாற்றம் செய்வது நல்லது.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 56



தமது மனைவியோடு 1984 இறுதியிலே இயக்கத்திலிருந்து அவரும் வெளியேறினார். இயக்க அலுவல்களில் பெண்கள் தொடர்ந்தும் பங்காற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் நான் அக்கறை காட்டினேன். ஆனாலும் இந்த முயற்சி, எனது உள் மனப்போராட்டத்தின் ஒரு வெளிப்பாடு மட்டுமே. இயல்பாகவே மற்ற வர்களோடு இணைந்து கொள்ளும் தன்மை என்னிடம் இருந்ததால் என்னோடு தொடர்பு கொண்டவர்களிடம் ஒட்டிக் கொள்வதில் எனக்குப் பிரச்சினை இருக்கவில்லை. போராளிகளும் என்னோடு மனம் விட்டு பழகினார்கள். புதிய உலகு ஒன்றுக்குள் வந்திருக்கும் மேலை நாட்டுப் பெண் என்று கருதி அனுதாபமாகவும் நடந்து கொண்டார்கள். எனது அர்ப்பணிப்புப் பற்றி அவர்களுக்கு என்றும் ஐயம் எழுந்தது கிடையாது. தேசிய விடுதலைக்கான ஆயுதம் தரித்த போராட்டத்தில் நான் எத்த கைய தியாகம் புரிய வேண்டும் என்பதை போராளிகள் நன்கு புரிந்து கொண்டு இருந்தார்கள். ஆனாலும் நான் ஏற்கனவே இந்தியா சென்று அங்குள்ள சமூக பண்பாட்டுக் கோலத்திலும், வாழ்க்கை முறையிலும் பரிச்சயம் பற்றி பெற்றிருந்தாலும் சமூகத்தினதும் பண்பாட்டினதும் நெளிவு சுழிவுகள் பற்றி நான் அறிந்திருக்கவில்லை.

சிக்கல் மிக்க அந்தப் பண்பாட்டுக் கோலத்தின் ஊடாக என்னை வழி நடத்த பாலா இல்லாதுவிட்டிருந்தால், மக்களோடுபழகத் தெரியாதவளாகவும் , அறிந் தோ அறியாமலோ மக்களைப் புண்படுத்துபவளாகவும் என்னைத் தப்பாகப் புரிந்திருப்பார்கள். சுருங்கக் கூறுவதானால் என்னைத் தப்பாகப் புரிந்தி ருப்பார்கள். எனது பண்பாடு வயப்படும் முயற்சி , தொடக்கத்தில் பாரிய பண்பாட்டு அதிர்ச்சியாகவே இருந்தது. ஒரு புதிய சமூக - பண்பாட்டு உலகு பற்றி முழுமையாக கற்பதாக அமைந்தது. ஒழுக்கம் தொடர்பா கவும் ஒரு புதிய பரிமாணத்தை கற்கவும் புரிந்து கொள்ளவும் வேண்டி யிருந்தது.

எனது நடத்தையில் சில சீராக்கங்களைச் செய்து கொண் டேன். எனது சிந்தனைப் போக்கை முழுமையாக மாற்றியமைத்தேன். என்னுடைய கருத்துக்கள் பல மாற்றம் கண்டன. அன்றாட வாழ்க்கை முற்றாக மாறியதும் ஆடை பற்றிய உணர்வும் மாறியது. இறுதியாக ஆண்டுகள் ஓட,ஒன்றை நன்றாக உணர்ந்து கொண்டேன். சிறிது காலம் வேறொரு நாட்டில் வாழ்வது வேறு. வேறொரு நாட்டில் ஒருவர் தனது சொந்தச் சமூகத்துக்குள்ளே வாழ்வது வேறு. ஆனால் இன் னொரு சமுதாயத்தின் அங்கமாக மாறுவது என்பது முற்றிலும் வேறானது.

(பதிவு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# எங்கள் தெருவில்...

-கோகுலராகவன்

எங்கள் தெரு அப்படி யொன்றும் பிரசித் தமானது அல்ல. நீங்கள் அறிந்து கொள்வதற்கு. வாகனம் போன பின்பு புகை கிளப்பும் வீதி தான். அதுவும் இருந்திட்டு ஒன்று தான் போகும். இவை யெல்லாம் இல்லையென்றால் எங்கள் தெருவில் காணும் புதினம் நாலாம் வீட்டு சிவசாமி யண்ணாரின் இராப்பாடல் கள்தான்.

உங்களுக்கு விளங்கும் என நினைக்கிறேன். அவர் ஒன் றும் வித்துவானல்ல; அவர் உள்ளே விடும் பனங் கள்ளு, சுப்பர்சொனிக் (நம்மூரில் கசிப்பின் மறுபெயர்) தான் அவரை வித்துவான் ஆக்கி விடும். ஒவ்வொரு நாளும் நாலுமணியளவில் அவரின் கச்சேரி தொடங்கும். கச்சேரி யில் தியாகராஜா பாகவாதர், ரீ.எம்.எஸ், சீர்காழி கோவிந்த ராஜன் சில வேளைகளில் இந்தக் கால உன்னிக் கிருஷ் ணனும் வந்து போவார் கள். இடையில் அவரின் மனைவி குழப்பினால், கையில் கிடைக்கும் பொருள் மனைவி மேல் தாளம் போடும். இத னால் மனைவி எதுவும் தடுப் பதில்லை. ஆனால் சிவசாமி யண்ணன் தானாக இராத்தா மலும் விடுவதில்லை. அடி யுதை தாராளம். ஒவ்வொரு நாளும் அவரின் அட்டகாசம் தொடரும்.

எனது அப்பாவும், எதிர் வீட்டு சிவலிங்கமாமாவும் கூடியிருந்து சிவசாமியண் ணனை கிண்டல் அடிப்பது வழக்கம்

"இஞ்சை சிவலிங்கம் இந்தக் குடியில் என்ன இருக் கின்றது?"

"அது சிவசாமி யிடம் அல்லது குடிக்கிறவையிடம் தான் கேட்க வேண்டும்..."

இரண்டு பேரும் ஏதோ பெரிய ''ஜோக்'' சொன்னது போல் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சிவசாமியண்ணரின் பாடல்கள் உரத்துக் கேட்டன. இடையில் அவரின் மனைவி யின் அழுகைச் சத்தம் கேட் டது. உடனே அப்பர் "இஞ்சை சிவலிங்கம் ஒருத் தன் மனை வியை நெடுகப் போட்டு அடிப் பானாம்... கொஞ்ச நாளில் அவனுக்கு கோயிலில் மேளம் அடிக்கிற தொழில் கிடைத் ததாம். அதன் பின்னர் அவன் மனைவியை அடிப்பதில் லையாம்" என்று கூற இரண்டு பேரும் கெக்கட்டம் இட்டுச் சிரித்தார்கள்.

"...இது பாரும் ஷேக்ஸ்பியரின் கதை"

"... அப்ப ஷேக்ஸ்பியர் காலத்திலும் சிவசாமி இருந்திருக்கிறான்..."

மீண்டும் சிரிப்பு.நாங்கள் படுக்கைக் குப் போன பின்னும் சிவசாமி யண்ணரின் பாடல்கள் கேட்ட வண்ணமிருந்தன.

இப்படியாக இருக்கும் நாளில் எங்கள் தெருவில் ஒரு விசேடம் நடந்தது. ஒரு விசர்நாய் வடிவில் வந்து சேர்ந்தது ஒரு மாலையில்.

முதலில் அதனை யாரும் கவனிக்கவில்லை. அது நாலைந்து நாய்களை உருட்டி கடித்த பின்னர் தான் சிறுவர்களும் பெரியவர்களும் "விசர் நாயடா விசர் நாயடா..." என்று கத்தியதும் ஊர் உஷார் அடைந்தது.

சிவலிங்கமாமா இரும்புக் கேற்றை உள்ளுக்குள் நின்று இழுத்துச் சாத்தியபடி அப்பாவிடம் ..."இஞ்சை பேரின்பநாயகம் விசர்நாயாம்..."

"...ஓம்... அல்ஷேசன் போல பெரிய நாயப்பா..."

இடையில் அம்மா-

"அடியுங்கோவன் அப்பா...?"

"உமக்கென்ன விசரே... விசர் நாய் கடிக்க முன்னம் ஆளிலை பாயும். அது தானாகப் போகட் டும்..."

அம்மா கதவுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்ததால் அம்மா வுக்கு பின்னால் நான் நின்று கொண்டிருந்தேன்.

அப்பா சொல்லி வாய் மூட முன்னர் அந்த நாய் தெரு மூலை யில் ஒரு நாயைக் கடிக்க விரட்டி யது. மிகவும் பெரிய நாய் எனக்கும் பார்க்கப் பயமாக இருந்தது.

"சிவலிங்கம் உமது பெரிய நாய் அடிக்கப் போய் ஆபத்தில் முடியும்..."

அத்துடன் விசர் நாயை அடிக்கும் எண்ணம் அப்பாவுக்கும் இல்லாமல் போய்விட்டது.

ஆனால் நாயின் இராஜாங்கம் தொடர் கின்றது. நாய்களை கலைப்பதும், ஆள் களை,மாடுகளைக் கலைப்பதும், போகும் வாகனங்களை கலைப்பதுமாய் இருந் தது.பின்னர் கோயில் பக்கத்தில் படுத்தும் விட்டது.

இந்த நேரம்பார்த்து எங்கள் சிவசாமி யண்ணன் "கையில் வைத்து காத்திருந் தால் காலடியில் காத்திருக்கும்" என்ற பாடலுடன் வீடு நோக்கி வந்து கொண்டி ருந்தார்.

சிவலிங்கம் மாமா உடனே கேற்றால் எட்டிப் பார்த்து "...இஞ்சை பேரின்பம், உந்த விசரனுக்கு விசர் நாய் கடிக்கப் போகுது... உடனே சொல்லும்..."

அப்பாவும் உடனே சிவசாமியண் ணனுக்கு விசர் நாய் கிடக்கும் விடய த்தை உரத்த குரலில் அறிவித்தார்.

சிவசாமியண்ணன் திடீர் பிரேக் அடித்து நின்று நாயைப் பார்த்து ஒரு சீட்டி அடித்தார்.

நாய்க்கும் அவருக்கும் கொஞ்ச இடை வெளி தான் இருந்தது. எல்லோ ரும் நினைத்தோம் சிவசாமியண்ணன் ஓடி விடுவார், என்று ஆனால் நடந்ததோ வேறு.

திரும்பியவர் வேலியில் எட்டி ஒரு கிளுவம் கதியாலை முறித்து துண்டாக்கிக் கொண்டு விசர் நாயை நோக்கி முன்னேறினார். விசர் நாய் உஷார் அடைந்து கடிப்பதற்குள் முன்னே பாய்ந்தது. நாய் பாயவும் சிவசாமியண் ணரின் முதல் அடி விழவும் கணக்காய் இருந்தது.

திரும்பியவர் வேலியில் எட்டி ஒரு கிளுவம் கதியாலை முறித்து துண்டாக் கிக் கொண்டு விசர்நாயை நோக்கி முன்னேறினார்.

விசர்நாய் உஷார் அடைந்து கடிப்ப தற்காக முன்னே பாய்ந்தது. நாய் பாயவும் சிவசாமி யண்ணரின் முதல் அடி விழவும் கணக்காய் இருந்தது.

பலமான அடி.நாய் "வக்" என்றபடி சரிந்து விழுந்தது. ஓங்கி அடித்த அடி. நாய் ஒருக்கால் கழுத்தை மேலே சுளைத்து "விலுக்" என்று ஓர் உதை உதைத்தது. வாயால் இரத்தம் கக்கியது. நான் கண்களை இறுக மூடிக்கொண்டேன். சம்பவம் நடந்து முடிந்தது. இரவு வரையும் அப்பா எதுவும் கதைக் கவில்லை. அப்பா வுக்கு இது வெட்க மாக இருந்திருக்க வேண்டும். சிவலிங்க மாமாவுக்கும் அப்படித் தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவரும் இரவு கதைக்க வர வில்லை. அப்பா ஈசிச் செயாரில் இருந் தார். நான் படுக்கைக்குப் போகும் நேரம்.

"...எடியேய் நான் இல்லாவிட்டால் இந்த றோட்டுக்காரர் எல்லோரும் வீட்டுக்கதான் மூத்திரம் பெய்திருப்பாங்களடி...' சிவசாமி யண்ணாரின் குரல்.

நான் அப்பாவைத் திரும்பி பார்த்தேன். அவர் ஈஸிச் செயரில் இருந்து சிறுத்துச் சிறுத்து காணாமல் போய்விட்டது போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சலுக்கு விருது



**பி.பி.சி.யின் உருது இணைய தளத்தில், குல் மகாய் என்ற பெயரில் தொடர்ந்து வலைப்பதிவு எழுதி வந்தார். இந்த வலைப்பதிவு பாகிஸ்தான் பெண்களிடம் விழிப்புணர்வைப் பரப்பியது. முகம் தெரியாத அந்தப் பெண்ணின் மீது வஞ்சம் கொண்டார்கள் தலிபான்கள்.**

● சூரியன்

“படிக்க வேண்டும் என்ற தீராத ஆர்வம் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் நடுக்கத் துடன்தான் பள்ளிக்குக் கிளம்புகிறேன். என் வகுப்பில் 27 பெண்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். இன்றோ 11 பேர் மட்டுமே இருக்கி றார்கள். என் தோழிகள் ராவல்பிண்டி, பெஷாவர் போன்ற இடங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மீதிப் பேர் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறோம்...”

மலாலா யூசுப்சாய் 11 வயதில் (2009 ஆம் ஆண்டு) எழுதிய பதிவு இது.

சந்தோஷமாகவும் உற்சாகமாக வும் கழிக்க வேண்டிய பால்ய பருவம், மலாலாவுக்கு மட்டும் இவ்வளவு ஆழ்ந்த சிந்தனையையும் துணிச்சலையும் தந்தது எப்படி?

பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத் தாக்கு தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மதவாதத்திலும் பழமை வாதத்திலும் ஊறிய இவர்கள் பெண்க ளுக்கு கணக்கிலடங்கா கட்டுப்பாடு களை விதித்திருக்கிறார்கள். அதில் ஒன்று, பெண்கள் கல்வி பயிலக்கூடாது.

சிறுவயதிலேயே தலிபான்களின் அட்டூழியங்களைக் கண்டு வந்த மலாலா, பெண்களின் முன்னேற்றம் கல்வியில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தார்... நம்பினார். தலிபான் களின் செயல்களை உலகறியச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

பி.பி.சி.யின் உருது இணைய தளத்தில், குல்மகாய் என்ற பெயரில் தொடர்ந்து வலைப்பதிவு எழுதி வந்தார். இந்த வலைப்பதிவு பாகிஸ்தான் பெண்க ளிடம் விழிப்புணர்வைப் பரப்பியது. முகம் தெரியாத அந்தப் பெண்ணின் மீது வஞ்சம் கொண்டார்கள் தலிபான்கள்.

இன்னொரு பக்கம் மக்கள் மத்தியில் மலாலாவுக்குச் செல்வாக்குப் பெருகத் தொடங்கியது. பெண் கல்வி, குழந்தைத் திருமணம், சுகாதாரம் என்று பல விஷய ங்களில் கவனம் செலுத்திய மலாலா, ஒரு சமூகப் போராளியாக உருவானார். பாகிஸ்தானின் தேசிய இளைஞர் அமைதி விருது, 14 வயது மலாலாவுக்கு வழங்கப்பட்டது.

**2012 ஒக்ரோபர் 9.**

தோழிகளுடன் பள்ளிப் பேருந்தி லிருந்து இறங்கி, நடந்து வந்தார் மலாலா. துப்பாக்கியுடன் வந்த ஒரு தலிபான், மலாலாவின் தலையிலும் கழுத்திலும் சுட்டுவிட்டுச் சென்றான். தோழிகள் படு காயம் அடைந்தனர். ஒரு நொடியில் உலகத்தையே ஸ்தம்பிக்க வைத்து விட்டார் மலாலா. பாகிஸ்தானில் இது வரை இல்லாத அளவுக்கு தீவிரவாதத் துக்கு எதிராக மக்கள் போர்க்கொடி பிடித்தனர்.

பள்ளி மாணவர்கள், மாணவிகள் எல்லோரும் நான்தான் மலாலா என்ற வாசகங்களை ஏந்தியபடி பிரார்த்தனை செய்தார்கள்.

“என் மகள் மலாலா” என்று பெண்களும் ஆண்களும் கதறினார்கள். உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் மத்தியில் அடையாளமாக மாறிவிட்ட மலாலா, குழந்தைகளுக்குள்ள பிரச்சினை களை குழந்தைகள் புரிந்துகொள்ளவும் வழி செய்திருக்கிறார்.

“என்னுடைய 6 குழந்தை களிடமும் மலாலாவைப் பற்றியும், அவள் எதற்காக இந்த முடிவைச் சந்திக்க நேரிட்டது என்பது பற்றியும் எடுத்துச் சொன்னேன். நான் மட்டுமல்ல... உலகில் உள்ள அம்மாக்களும் ஆசிரி யர்களும் குழந்தைகளிடம் மலாலா வைப் பற்றிச் சொல்லியிருப் பார்கள். மலாலாவுடன் சேர்வோம்... பெண் கல்விக்காகப் போராடுவோம்” என்ற ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி, மலாலாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று 2012 ஆம் ஆண்டு கூறியிருந்தார். அவரின் கனவு இப்போது நிறைவேறியிருக் கிறது. 2014 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசை இந்தியா வைச் சேர்ந்த சமூக ஆர்வலரான கைலாஷ் சத்தியார்த்தியுடன் பகிர்ந்து கொண்டி ருக்கிறார் மலாலா. சிறார் கல்விச் செயற்பாட் டாளராக . ஐ. நாவின் பிரதிநிதியாக வலம் வந்த மலாலா மிகக்குறைந்த வயதில் (17 வயது) அமைதிக்கான நோபல் பரிசை வென்ற வர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

“மிக இளம் வயதில் நோபல் பரிசினை பகிர்ந்து கொள்வது பெருமை யாக உள்ளது. பெண்கள் கல்வி உரி மைக்கான எனது போராட்டம் தொட ரும். என்னைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பெண் குழந்தைகளும் கல்வி உரிமை பெற வேண்டும். எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பம். எனக்கு கிடைத்த நோபல் பரிசு பெண் குழந்தைகளை ஊக்குவிப்பதாக அமை யும் என நம்புகிறேன். இந்த நோபல் பரிசு மூலம் இந்தியாவும், பாகிஸ்தானும் பரஸ்பரம் அமைதியை நிலைநாட்ட பேச்சுவார்த்தையை தொடக்க வேண் டும் என இரு நாட்டு பிரதமர் களையும் கேட்டுக் கொள்கிறேன். இதன் முதற் கட்டமாக நான் நோபல் பரிசு பெறும் அரங்கில் இந்திய-பாகிஸ்தான் பிரதமர்கள் ஒன்றாகக் கலந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறேன்” இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் மலாலா.

சமாதானத்தின் ஒளியைப் பரவ விடும் இந்தச் சின்னப் பெண்ணுக்கு நோபல் பரிசு பொருத்த மானதுதான்.

**மிக இளம் வயதில் நோபல் பரிசினை பகிர்ந்து கொள்வது பெருமையாக உள்ளது. பெண்கள் கல்வி உரிமைக்கான எனது போராட்டம் தொடரும். என்னைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பெண் குழந்தைகளும் கல்வி உரிமை பெற வேண்டும். எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பம். எனக்குக் கிடைத்த நோபல் பரிசு பெண் குழந்தைகளை ஊக்குவிப்பதாக அமையும் என நம்புகிறேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் கலக்லியும்

**அத்தியாயம் - 18**

## அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

படலை ஜே.கே

"முடியும்"

பிரம் சொல்ல நேரடி அலையில் பார்த்துக்கொண்டிருந்த மொத்த எல்லாமுமே கைதட்டி - காலம்காலமாக உலுக்கிக்கொண்டிருந்த கேள்விக்கான பதில் .. இன்னும் கொஞ்ச நேரம் தான். ஒரேலியும் ரெண்டெலியும் கட்டிப்பிடித்து உதட்டுக்கு உதடு 'கிஸ்' பண்ணிக்கொண்டார்கள்.

"சொல்லு .. இப்பவே .. குவிக்"

"சொல்ல கொஞ்சம் டைம் எடுக்கும்"

"உனக்கா? நீ தானே எங்கள் நேரத்தை உறையச் செய்து செங்குத்து நேர அச்சில் பயணம் செய்து விடையைக் கண்டுபிடித்து சொல்லுவாயே"

"உண்மை தான் அது எந்த நேர அச்சில பயணம் செய்தால் விடை கிடைக்கும் என்று தெரிவதால் செய்வது. ஆனா இந்தப் பதிலைக் கண்டுபிடிக்க சாத்தியமான எல்லா நேர அச்சுகளையும் ஆராயவேண்டும். எல்லா டேட்டாவையும் கலக்ட் பண்ணவேண்டும். சாம்பிளிங் என்ற கதைக்கே இடம் இல்லை"

"சரி பதில் சொல்ல எவ்வளவு நேரம் தான் எடுக்கும் - ரெண்டெலி பதற்றத்தோடு தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்."

"சரியாகச் சொல்லுவதானால் இருநூற்று நாப்பத்திரெண்டு மில்லியன், முன்னூற்றியிருபத்தையாயிரத்து எழுநூற்றி ஏழு ஆண்டுகளும் , நானூற்றி எழுபத்தைந்து நாள்களும் நாற்பத்தெட்டு மணித்"

"பொறு பொறு பொறு .. மில்லியனா?"

"யெஸ் .. நீங்க கண்டுபிடிச்ச இலக்கஅமைப்பு படிதான், எண்ணினா ஒன்று இரண்டு மூன்று .."

அதே செக்கனில் அத்தனை மில்லியன் ஆண்டுகளையும் எண்ணிமுடித்தது பிரம் ..

"அடச்சீ .. அவ்வளவு காலம் எவன் உன்னைப் பார்த்துக்கொண்டிருப்பான்?"

"பார்த்துக்கொண்டிருக்கோணும் .. நான் ஹீட் ஆகாம மெய்ன்டெய்ன் பண்ணவேணும் நான் டிஸ்ப்ளே ஹைட் பண்ணப் போறன். உங்கள் எல்லோரையும் அலைக்கழிக்கும் கேள்விக்கான அந்தப் பதிலோடு மீண்டும் இருநூற்று நாப்பத்திரெண்டு மில்லியன் .."

பிரம் கொம்பியூட்டர் சொல்லிக்கொண்டே தன்னுடைய ஸ்க்ரீன் டிஸ்ப்ளேயை நிறுத்திவிட்டு பதிலைக் கண்டுபிடிக்க ப்ரோசஸ் பண்ணத் தொடங்க, பார்த்துக்கொண்ட அத்தனை பேரும் அதிர்ச்சியில் விக்கித்துப் போயினர். நூற்றுமுப்பது ஆண்டுகால முயற்சிக்கு பலனே இல்லையா, போனஸும் கிடைக்காதே என்று கவலைப்பட்டனர் அத்தனை பொறியியல் எலிகளும்.

"ச்சீ .. ஏன் எமக்கு மட்டும் இப்பிடி?" என்று அலுத்துக்கொண்டார்கள் ஒரெலியும் ரெண்டெலியும்.

***

அன்றைக்கு விடியும்போதே சுண்டெலி ஞாபகார்த்த மண்டபத்தில் பட்டிமன்றங்கள் ஆரம்பித்திருந்தன. இந்த வாழ்க்கை, பிரபஞ்சம். கரும்பொருள் இது எல்லாவற்றையுமே ஆட்டிப் படைக்கும் அந்தப் பதில் என்ன என்ற தலைப்பில் அது கடவுள் என்று பாபிலோன் ராசைய்யாவும், கடவுள் இல்லை ஆன்மாவே என்று ராமஜெயமும், இவையிரண்டும் இல்லை, இருப்பவை இல்லாதவை எல்லாமே இயல்பாக தோன்றி மறைபவையே என்று இலக்கியச் சூறாவளி செல்லி டியோனும் மாறி மாறி முப்பத்து ஏழாவது ஆண்டாக நிகழ்த்திக்கொண்டிருக்கும் தொடர் சுழலும் சொற்போரும் இறுதிநாளான இன்று சூடு பிடித்திருந்தது.



அந்த பதில் என்னவாக இருக்கும் என்ற லொட்டரி வெற்றிப் பரிசு ஏழாயிரம் பில்லியன் சபரிகாசுகளுக்கு (சுமார் ஏழு பூமிகளை உருவாக்கி நானூறு பில்லியன் ஆண்டுகள் பராமரிக்க ஆகும் தொகை) உயர்ந்துவிட்டது. பள்ளிகள், நிறுவனங்கள் எல்லாமே விடுமுறை விடப்பட்டு எல்லோரும் தத்தமது கண்ணாடிகளை பிரம் கணனி பராமரிக்கப்படும் ஒரெலி-ரெண்டெலி நினைவு ஆராய்ச்சி சாலைக்கு டியூன் பண்ணி இருந்தார்கள்.

இதற்கு பிறகு என்ன? என்ற பதற்றம் எல்லோரிடமும் விரவிக்கிடந்தது. அன்றைய திகதிக்கு பில் கட்டவேண்டியவர்கள் கட்டாமல் கள்ளமடித்தார்கள். ஒரு சிலர் கோயில்களில் போய் தம் பெயருக்கு அர்ச்சனை செய்துகொண்டிருந்தார்கள். வேறு சிலர் எதற்கென்றே தெரியாமல் தங்கள் கணவனையோ மனைவியையோ, கண்ணில் கண்டவரையோ கட்டிப்பிடித்து அவசரமாகச் சாய்ந்தார்கள். ஒரு வித பதற்றம் எல்லா இடத்தில் தொற்றியிருந்தது. பதில் கிடைத்தபின் அடுத்தது என்ன என்ற பதற்றம்.

விஞ்ஞானி எலிதாசன்325 பிரம் கணனியின் திரையைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். எவ்வளவு காலம் தவம். இவருடைய குடும்பமே இதற்காக தங்கள் பரம்பரையை அர்ப்பணித்திருந்தார்கள். காதல், திருமணம் என்ற ஒன்றும் இல்லாமல், ஐகியூ அதிகமான டிஎன்ஏக்களை தேடிக்கண்டுபிடித்து, அதிலிருந்து குரோமோசோம்களை பிரித்தெடுத்து அதை ஒரெலி ரெண்டெலியின் ஆதார குரோமோசோம்களுடன் இணையவிட்டு முன்னைய தலைமுறையை விட அதிக புத்திசாலி எலித்தலைமுறையை அடுத்தடுத்து உருவாக்கி, பிரம்கணனி மேலிருந்த கட்டுப்பாடு தம் குடும்பத்தைவிட்டு அங்காலே இங்காலே போகாமல் பார்த்துக்கொண்டார்கள். அதிலும் திறமை அடிப்படையிலேயே கணனிப் பராமரிப்பு பொறுப்பு வழங்கப்படவேண்டும் என்று தீர்ப்புச் சொன்ன நீதிபதியின் மூளையில் செடினான் கிராணி என்ற மைக்ரோ சிப்ஸை நிறுவி, அந்த நீதிபதியைப் பைத்தியமாக்கி, எவ்வளவு தில்லுமுல்லு, போராட்டம் இடைஞ்சல்கள் செய்து. எல்லாமே இந்த நாளுக்குத் தானே என்று நினைத்தபோது எலிதாசன் 325க்கு பெருமை பிடிபடவில்லை. கிட்டத்தட்ட இருநூற்று நாற்பத்திரண்டு மில்லியன் ஆண்டுகள். அந்தக் கணனி அதிகம் சூடாகாமல், குளிர்ந்தும்விடாமல், அவ்வப்போது வரும் வைரஸ்களில் இருந்து காப்பாற்றி மெயின்டைன் பண்ணி.....

பெருமூச்சு விட்டார்.

ஒரெலி-ரெண்டெலி நினைவு ஆராய்ச்சிசாலைக்கு வெளியே கூட்டம் அலைமோதியது. பறவைகள் மிருகங்கள் கூட தத்தமது செக்சன்களில் கூடி இருந்தன. கடல்வாழ் உயிரிகளின் பிரதிநிதிகளுக்கு விசேடமாக ஒரு தடாகம் அமைக்கப்பட்டிருந்து. முன் வரிசை முழுதும் எலிகள் கோர்ட் - சூட்டுடன் அமர்ந்திருந்தன. சில வேட்டி சால்வையில். ஆங்காங்கே சில குரங்குகளும் எட்டாத தூரத்தில் மனிதர்களை ஒத்த உயிரினங்களும் வெயிலில் காய்ந்துகொண்டிருந்தன. கரும்பொருளின் மூன்று சூரியன்களால் எல்லா இடமும் வெளிச்சம் பரவிக்கிடக்க, ஜெனரேட்டர் போட்டு எல்லா இடத்தையும் இருட்டாக்க வேண்டியிருந்தது.

**(கலக்குவார் கந்தசாமி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைகிறதா பாலுறவு?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

"பிஞ்சிலை பழுத்திட்டுதுகள். கொஞ்சம் வளர்ந்திட்டால் கடற்கரை, பார்க் எல்லாம் முகம் உரச நாட்டியம் போடுதுகள். காலம் கெட்டுப் போச்சு."

இன்றைய இளைய தலைமுறையினரைப் பற்றிக் காட்டமாகப் பொரிந்து தள்ளினார் ஒருவர்.

உண்மைதான். தெருவெங்கும் 'இலவச கண்றாவிக் கண்காட்சிகள்' அரங்கேறும்போது, காலமும் நாமமும் நாறுவதைத் தவிர வேறு என்ன நடக்கும்.

ஆனால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இன்றைய சூழலில் குழந்தைகள் விரைவிலே உடல் வளர்ச்சிடைகிறார்கள்.

பராயமடைவது முந்தி வருகிறது. கையைச் சூப்பி நிற்கும் காலத்திலேயே வேறெதையோ நாடும் காலமாகிவிட்டது.

உண்மையில் பாலுணர்வும் பாலுறவும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதனவே. காதல், காமம், புணர்வு, மகப்பேறு - இவை இல்லையேல் உயிரினத்தின் நீட்சி தடைப்பட்டுப் போகும். ஆனால் பாலுறவானது மகப் பேற்றுக்கானது மாத்திரமல்ல. அதற்கப்பாலும் அதன் மகத்துவம் தொடர்கிறது.

மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சுயமதிப்பை மேம்படுத்துகிறது, பிறர் மீதான அன்புக்கும் காதலுக்கும் வலுவூட்டுகிறது. மிக மகிழ்ச்சியான ஆரோக்கியமான பொழுதுபோக்காகவும் இருக்கிறது.

நெறி தவறிப்போய், பாலியல் நோய்களைத் தேடிவாங்கும் உறவு பற்றி இங்கு நான் பேசவில்லை.

ஆனால் அண்மைய அறிக்கை ஒன்று பாலுறவு விடயத்தில் மனித சமுதாயத்துக்கு சிவப்பு சமிக்ஞை காட்டுகிறது.

**செயற்பாட்டில் தளர்வு**

இன்றைய இளைய சமுதாயத்தினர் பாலுறவில் ஈடுபடுவது படிப்படியாகக் குறைந்து வருகிறதாம். முந்தைய தலைமுறையினரோடு ஒப்பிடும்போது இன்றைய தலைமுறையினர் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே செயலில் இறங்குகிறார்களாம். எதிர்ப்பாலரைப் பார்க்கிறார்கள்: பேசுகிறார்கள்: ஆபாசமாகக் கிண்டலும் அடிக்கிறார்கள். வெளிப்படையாகக் கிலேசமின்றி அது பற்றிக் கலந்துரையாடலும் செய்கிறார்கள்.

ஆனால் அதற்கு அப்பால் ..?

பிரிட்டனில் செய்யப்பட்ட 'வாழ்க்கை முறை மற்றும் பாலியல் மனப்பான்மை தொடர்பான கருத்து' ஆய்வில் இது



கண்டறியப்பட்டது.

16 முதல் 44 வயதுள்ளோர் உடலுறவில் ஈடுபடுவது கடந்த இரு தசாப்தங்களாகக் குறைந்து வருகிறதாம். இப்பொழுது பெண்கள் சராசரியாக மாதத்தில் 4.8 தடவையும் ஆண்கள் சராசரியாக 4.9 தடவைகளும் பாலுறவில் ஈடுபடுகிறார் களாம். பத்து வருடங்களுக்குஜ முன் இது முறைப்படி 6.3, 6.2 ஆகவும் இருந்ததாம். அதற்கு, பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இதுவே முறையே 6.1, 6.4 ஆக இருந்திருக்கிறது.

சரி முதியவர்கள் என்ன செய்கிறார்கள்? முதியவர்கள் எனும்போது 65 முதல் 74 வயதானவர்களை இங்கு குறிக்கிறது.

'தேவாரம்,திருவாசகம், ஜபம், தியானம், ஸ்தோத்திரம் என முக்திக்கு வழி தேடிக் கொண்டிருப்பார்கள்' என நினைக்கிறீர்களா?

இல்லை. அவர்களும் பாலுறவு வைக்கிறார்கள். வயதான் பெண்கள் சராசரியாக மாதத்தில் 1.4 தடவையும் ஆண்கள் சராசரியாக 2.3 தடவைகளும் ஈடுபடுகிறார்களாம். அவர்கள் வயதுக்கு அது போதுமானதாக இருக்கலாம். முந்தைய தசாப்தங்களில் அவர்களது செயற்பாடு பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

**காரணங்கள் என்ன?**

இன்றைய இளைய சமூதாயத்தினர் பாலுறவில் ஈடுபடும் எண்ணிக்கை குறைந்து செல்வதற்கு காரணம் என்ன?

நவயுகத்தின் அவசரமும், நேரமின்மையும் பன்முகமான சமூக ஈடுபாடுகளும் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள். தொழிலைத் தக்கவைத்திருக்க வேண்டியுள்ளது. பணத்தின் தேவைக்கு எல்லையே அற்றுப் போய்விட்டது. இதனால் ஏனையவற்றில் ஈடுபடுதல் குறைந்திருக்கலாம்.

அடுத்த காரணம் நவீன தொழில் நுட்ப வசதிகளாகும்.

ஒருவரில் ஒருவர் ஈடுபாடுள்ள இளைஞனையும் யுவதியையும் ஒரு அறையில் அடைத்து வைத்தால் என்ன நடக்கும்? கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து .... எல்லாம் நடக்கும்.

ஆனால் அந்த அறையிலேயே இணைய வசதியுடன் 'ஐபாட்' அல்லது 'டப்லட்' கிடைத்தால் நிலைமை தலைகீழாக மாறி விடும். டக் எனக் கிளிக் பண்ணி ஈ மெயிலை அல்லது மெசேஜைப் பார்ப்பார்கள். தனிப்பட்ட செய்திகள் முதல் உலக நிலவரங்கள் வரை எதையும் தான் தப்பவிட்டு விடக் கூடாது என்ற என்ற ஆழ்மன உந்துதலே இதற்குக் காரணமாகும். கம்பியில்லாமலே ஈடு கணும் கிடைக்கும் இணைய வசதி மனிதர்களின் வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டது.

இப்பொழுது பாலுறவு கொண்டால் எவற்றையெல்லாம் இணையத்தில் இழக்க நேரிடும்? தப்பவிடக் கூடாதவற்றைக் கவனித்துவிட்டு சற்று நேரம் தள்ளி உறவு கொள்ளலாமா? என்று பலர் யோசிக்கும் அளவுக்கு நவீன தொடர்பு சாதன வசதிகள் வாழ்வுக்குள் ஆழ ஊடுருவிவிட்டன.

பேஸ்புக், வட்ஸ்அப், ருவிட்டர் போன்றவை எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் மனித உறவுகளை உள்ளங்கையுக்குள் நெருங்கிக் கொண்டு வருவது உண்மைதான். ஆனால் தத்தமது கணனிகளுக்குள்ளும் ஐபாட்களிலும் மூழ்கிக் கிடப்பதால் அருகில் இருக்கும் சகமனிதர்களுடனான உறவுகளில் பெரும் விரிசலை ஏற்படுத்தி விடுகின்றன.

இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக் காட்டலாம். பாலியல் இன்று மறைபொருளாக இல்லை. வெளிப்படையாகப் பேசப்படுகிறது.

மேலை நாட்டு ரீ.வீ சனல்களில் (Girls, This is England) மட்டுமின்றி நீயா நானா போன்றவற்றில் கூட பேசப்படுகிறது. ஒரு காலத்தில் பேசக் கூசப்பட்ட விடயங்கள் கூட இப்பொழுது அலசி ஆராயப்படுகின்றன. கள்ளத் தொடுப்புகள் வெளிப்படையாக விவாதிக்கப்படுகின்றன.

**உணர்வை முந்தும் அறிவியல்**


பாலுறவு விடயத்தில் முற்காலத்தில் இருந்த ஒளிவு மறைவு, இரகசியத்தன்மை, பரஸ்பர அந்நியோன்யம் போன்றவை இன்று இல்லாமல் போய்விட்டது. அதிலிருந்த கள்ள நாட்டம் காணாதொழிந்துவிட்டது.

மறுவார்த்தையில் சொல்வதனால் பாலுறவு என்பது உணர்வு சார்ந்ததாக இருந்தமை குறைந்து அதில் அறிவியல் அம்சம் மேலோங்கி வருகிறது என்று சொல்லலாம்.

இவையும் பாலுறுவில் நாட்டம் குறைவதற்கு காரணமாகலாம்.

மிகையான எதிர்பார்ப்புகளும், அதீத சிந்தனைகளும் முன்பு வெளிப்படையாகப் பேசத் தயங்கிய விடயத்தை கூறுபோட்டு பகுத்தறிய விளையும் அறிவியல் தேடல்களும், செயலூக்கத்தைப் பின்தள்ளிவிட்டன.

காமம், பாலுணர்வு, புணர்தல் போன்ற செயற்பாடுகள் உயிரினத்தின் அடிப்படையான மிருக இயல்பு ஆகும்.



மனிதன் கூர்ப்பில் மிகவும் மூத்த உயிரினம், தனது மூளைத்திறனினல் தங்கியிருப்பவன் கீழே மறைந்து கிடக்கும் அசிங்கத்தை நாடுவது அவனது அறிவாற்றலுக்கு இழுக்கு போன்றதான மறைமுக உணர்வும் இளைய சமுதாயத்தில் மேலோங்கி வருகிறது. இவையும் அவர்களது பாலியல் செயற்பாட்டை பின்தள்ளுவதாகக் கொள்ளலாம்.

எனவேதான் மனிதனின் இயல்பான உயிரியல் செயற்பாடுகளை அறிவியல் ரீதியாக நுணுகி ஆய்பு புகுவது தோல்வியிலேயே முடிகிறது. இன்னொரு சகமனிதரிலிருந்து பெறக் கூடிய இன்பங்கள் எவை என்பதையும், அவற்றின் பலாபலன்களையும், அதை எப்படிச் செய்தால் தனக்கும் மற்றவருக்கும் பூரண திருப்தி கிட்டும் என்பதை இணையங்களில் தேடிக்கொண்டிருந்தால் கணணியோடும் ஐபாட்டோடும் புணருவதில்தான் முடியும்.

> **காதல், காமம், புணர்வு, மகப்பேறு - இவை இல்லையேல் உயிரனத்தின் நீட்சி தடைப்பட்டுப் போகும். ஆனால் பாலுறவானது மகப் பேற்றுக்கானது மாத்திரமல்ல. அதற்கப்பாலும் அதன் மகத்துவம் தொடர்கிறது.**
> **மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சுயமதிப்பை மேம்படுத்துகிறது, பிறர் மீதான அன்புக்கும் காதலுக்கும் வலுவூட்டுகிறது. மிக மகிழ்ச்சியான ஆரோக்கியமான பொழுதுபோக்காகவும் இருக்கிறது.**

மொத்தத்தில் பார்த்தால் இன்றைய இளைய தலைமுறையினர் செக்ஸ் பற்றி அதிகமாகவே சிந்திக்கின்றனர். ஆனால் வேலையால் வீடு திரும்பியதும் ரீவீ பார்க்கிறார்கள், இணையத்தில் மூழ்குகிறார்கள். எல்லாம் முடிய கண்கள் சுழல சோர்ந்து படுத்துவிடுகிறார்கள். நேரமிருந்தால் மட்டுமே பாலுறவு என்றாகிவிடுகிறது.

**ஆய்வு தெளிவுறுத்தும் வேறு விடயங்கள்**

பிரிட்டனில் செய்யப்பட்ட ஆய்வானது இளைஞர்களது பாலியல் நாட்டம் பற்றி மட்டுமின்றி, ஒட்டுமொத்த சமூகத்தின் பாலியல் சம்பந்தமான வேறு பல விடயங்களையும் சுட்டிக் காட்டுகிறது.

மிக இளவயதிலேயே ஆரம்பித்துவிடும் பாலுறவுகள் முதுமையிலும் (74வயது) தொடர்கின்றன.

தன்னினச் சேர்க்கையை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்து வருகிறது. அதே நேரம் திருமணத்துக்கு அப்பாலான பாலுறவை ஏற்கும் தன்மை குறைந்துவருகிறது.

பாலியல் உறவுப் பிரச்சனைகள் இருபாலாரிலும் 10 இல் 4 பேருக்கு இருக்கிறதாம். இருந்தபோதும், 10 இல் ஒருவரே அதனால் கவலைப்படுவதாகவோ மனஉளைச்சலுக்கு ஆளாவதாகவோ கூறினார்கள். பாலுறவில் நாட்டமின்மையையே 15 சதவிகிதமானவர்களின் முக்கிய பிரச்சினையாக இருந்திருக்கிறது. அதிலும் பெண்கள் ஆண்களை விட இரு மடங்காக பாலுறவு நாட்டமற்றுக் காணப்பட்டார்கள்.

விருப்பத்துக்கு மாறாக உடலுறவு வைக்க வேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டு இருந்திருக்கிறது. பெண்கள் அதிக பாதிப்புக்கு ஆளான போதும் ஆண்களும் தப்பவில்லை. 10 பெண்களில் ஒருவர் இஷ்டமின்றி உடலுறவு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த அதே நேரம், 70 ஆண்களில் ஒருவருக்கு அத்தகைய நிலை ஏற்பட்டதாம். எந்தப் பெண்ணைக் கண்டாலும் புணரும் வேட்கையோடு திரியும் எமது சமூகச் சூழலோடு ஒப்பிடும்போது இந்தத்தகவல் ஆச்சரியம் அளிக்கிறது.

பிரிட்டனில் ஏற்படும் கருத்தங்கல்களில் ஆறில் ஒரு பங்கு எதிர்பாராததாக (திட்டமிடப்படாததாக) இருக்கிறது. மற்றொரு விதத்தில் பார்த்தால் 60 பெண்களில் ஒருவர் எதிர்பாராதவிதமாக கருத்தங்கலுக்கு ஆளாகிறார்கள். கருக்கலைப்பு சட்டபூர்வமாக இருக்கும் பிரிட்டனில் இது பெரும் சிக்கலை ஏற்படுத்தாது.

ஆனால் மதம், புனிதத்துவம், கண்ணியம் எனப் மேடைக்கு மேடை பேசிக் கொண்டு இருளில் பெண்களைக் குதறி எடுக்கும் நம்நாட்டில் சட்டவிரோதக் கருக்கலைப்புகளால் பலியாகும் பெண்களின் எண்ணிக்கை தாய்மைவாதிகளின் கண்ணில் படுவதில்லை. சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்புணர்வு போன்றவற்றால் காப்பமுறும் பெண்களின் துயரம் கவனத்தில் கொள்ளப்படாத ஒரே புனித பூமி சிறிலங்காவாத்தான் இருக்கும்.

"என்ன சொல்ல? என்ன சொல்ல? இன்னும் சொல்லி நீங்கள் அழ......."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சியிலிருந்து தேசத்தின் எழுச்சிக்கு



## வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டம் 6 ஆம் கட்டம்

குடும்பத்தின் பொருளாதாரம் மற்றும் போஷாக்கை மேம்படுத்தும் இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்



2014 ஒக்டோபர் 20ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.07 இற்கு வரும் சுபவேளையில் கிழக்குத் திசையை நோக்கி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் ஆரம்பமாவதுடன் அதனுடன் இணைந்ததாக நாடெங்கும் 14,022 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் காய்கறி விதைகள், காய்கறி, பழங்கள், தென்னங்கன்றுகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், நிரந்தர பெருந்தோட்ட பயிர்கள், மூலிகை செடிகளை நடுதல், கடற்றொழில் மற்றும் கால் நடை பிரிவுகள் உள்ளடங்கலாக இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் நிகழ்வுகள் நடைபெறும்.

**மேலதிக தகவல்களுக்கு**

பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் அல்லது குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களை நாடுங்கள்.

**தொழில்நுட்ப அறிவுறுத்தல்களுக்கு**

பிரதேச விவசாய ஆலோசகர்கள் அல்லது 1920 கமத்தொழில் நிவாரண உதவிகள் மற்றும் விவசாய ஆலோசனை சேவைப் பிரிவை அழையுங்கள்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு


## பொதுமக்களுக்கான முக்கிய அறிவித்தல்

எங்கள் மீது விசுவாசம் வைத்துள்ள அங்கர் அன்னையரே

கடந்த வாரம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மூன்று தொகுதி அங்கர் பால்மா உற்பத்திகளும் நுகர்வுக்குப் பாதுகாப்பானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்க அதிகார சபைகளால் மேற்கொள்ளப்பட்ட சுயாதீன பரிசோதனையானது எமது உற்பத்தியின் உணவுப் பாதுகாப்பு அல்லது தரம் தொடர்பில் எவ்விதமான குறைபாடுகளும் கிடையாது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு அங்கர் எப்போதும் அதிமுக்கியத்துவம் கொடுத்துவருவதுடன், எமது உற்பத்தியின் பாதுகாப்பு மற்றும் தரம் தொடர்பில் இலங்கையிலுள்ள நுகர்வோர் பூரண நம்பிக்கை கொள்ள முடியும்.

இலங்கையிலுள்ள நுகர்வோருக்கு மீளுறுதியளிக்கும் வகையில் பொதுமக்களின் நன்மைகருதி இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அங்கர் 0777 99 55 22










ஆட்கடத்தல்காரர்களின் பொய்களுக்கு ஏமாந்து நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை வீணாக்க வேண்டாம்.

- வீசா இல்லாமல் படகில் ஏறும் நீங்கள் அவுஸ்திரேலியாவைச் சென்றடைய மாட்டீர்கள்.
- குடும்பத்தினர், சிறுவர்கள், ஆதரவற்ற பிள்ளைகள், கல்வித்தகைமை கொண்டவர்கள் அல்லது விசேட தகுதிகளையுடையோர் அனைவருக்குமே இச்சட்டம் பொருந்தும்.
- நீங்கள் யாராக இருந்தாலும், எங்கிருந்து வந்தாலும் அவுஸ்திரேலியாவில் குடியமர முடியாது.

வீசா இல்லாது படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு போக வேண்டாம்

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி
மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa

## யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!



24 கரட்டுக்கு ரூ. 42,000/-

22 கரட்டுக்கு ரூ. 36,000/-

எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு

கெனிஸ்டன் 0777 716 986
சுரேஸ் குமார் 0773 384 981

LB FINANCE

GOLD LOANS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெருமாள் பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மாக் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஒக்ரோபர் 15ஆம் திகதி வெளியிடப்பட்டது.